விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii
பக்கங்கள்: பதினாறு
சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 06 வியாழக்கிழமை (18.02.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 61

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO

## ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

(கொழும்பு)

கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல்சரத்பொன்சேகாவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நேற்று வாக்கு மூலம் பதிவு செய்துள்ளனர்.

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கடந்த சில தினங்களாக அவரிடம் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை நடத்தியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள கொழும்பு கடற்படைத் தலைமையக வீட்டில் இந்த விசாரணைகள் இடம்பெற்றதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை (15 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை விடுதலை செய்ய கோரி 10 இலட்சம் கையெழுத்து!

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி 10 இலட்சம் பேரிடம் கையெழுத்து பெறும் முகமாக நேற்று செய்தியாளர் சந்திப்பொன்று இடம்பெற்றதுடன் கையெழுத்தைப் பெறும் வைபவம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

10 இலட்சம் பொதுமக்களிடம் கையெழுத்தைப் பெறும் நோக்கில் நேற்று முற்பகல் 11.45 மணியளவில் கொழும்பு ஜயவர்த்தனபுர கேந்திர நிலையத்தில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் (15 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுத்தேர்தலில் தனித்தா? கூட்டா?

# தமிழ்க் கட்சிகள் தீவிர ஆலோசனை

## சில தினங்களில் இறுதி முடிபு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்தா அல்லது கூட்டுச் சேர்ந்தா போட்டியிடுவது என்பது குறித்து தமிழ் அரசியல் கட்சிகள் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளன.

சில கட்சிகள், அரசுடன் இணைந்து போட்டியிடுவதா அல்லது தனித்துப் போட்டியிடுவதா என்றும் ஆலோசனை நடத்திவருகின்றன. சில கட்சிகள் தமிழ்க்கட்சிகளை இணைத்துப் போட்டியிடத் திட்டமிட்டுள்ளன. (16 ஆம் பக்கம் பார்க்க)

## 13 வேட்பாளர்களின் பட்டியல் தாக்கல் செய்யப்பட வேண்டும்

### யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் 13 வேட்பாளர் அடங்கிய பட்டியலைத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் 9 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படவுள்ளதால் ஒவ்வொரு கட்சி சார்பாக வேட்புமனுத் தாக்கல் செய்யப்படுகின்றபோது 13 பேரின் பெயர் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும்.

கட்சி சார்பாகவோ, சுயேட்சையாகப் போட்டியிடவோ விரும்புபவர்கள் ஒரு வேட்பாளருக்கு 8 ஆயிரம் ரூபாய் கட்டுப் பணம் செலுத்தப்பட வேண்டும் எனவும் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் குகநாதன் தெரிவித்துள்ளார். (ச-7,4)

## தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்ப முடிபுத் திகதி எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல்கள் ஒவ்வொரு பிரதேசங்களிலும், யாழ்.மாவட்டச்செயலகத்திலும் பார்வையிடலாம். படிவங்களைப் பார்வையிட்டு இடம்பெயர்ந்த வாக்காளர்கள் 26 ஆம் திகதி வரை விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்க முடியும் என யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் குகநாதன் தெரிவித்துள்ளார். (ச-7,4)

## மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கான தண்டனையே வரிச் சலுகை நீக்கம்!

### ஏ.எவ்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

சரணடைந்த விடுதலைப்புலிகள், உதவி நிறுவனப் பணியாளர்கள், பல ஆயிரம் பொதுமக்கள் ஆகியோர் மீதான படுகொலை போன்ற பல மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் இலங்கைப் படையினர் மீது உள்ளன. இவ்வாறான மனித உரிமை மீறல்களுக்கான தண்டனையாகவே ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கை அமைந்துள்ளதாக ஏ.எஃப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கைக்கான ஜி.எஸ்.பி.பிளஸ் வர்த்தக வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக கடந்த திங்கட்கிழமை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவித்தலை இலங்கை அரசு விமர்சித்துள்ள போதும் நடைமுறையில் உள்ள மனித உரிமைகளின் தரம், அங்கு மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விரிவான விசாரணைகளை மேற்கொண்ட பின்னரே தாம் இந்த முடிபுக்கு வந்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாதுகாவலர்கள் விடுதலை

### கடும் விசாரணைகளுக்குப் பின்னர்!

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கைது செய்யப்பட்டுக் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டு வந்த ஜெனரல் சரத் பொன்சேகாவின் பாதுகாவலர்கள் 11 பேர் உள்ளிட்ட 14 பேர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் நேற்றுப் புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்டோரில் ஜெனரல் சரத் பொன்சேகாவின் களுத்துறை மாவட்டத் தேர்தல் கண்காணிப்புப் பணிகளுக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவரும், சிவிலியன்கள் இருவரும் அடங்குவர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினால் பெறப்பட்ட வாக்கு மூலங்களில் எதுவித குற்றங்களும் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் நிபந்தனையற்றதும் பிணையில்லாததுமான முழுமையான (15 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத் தேர்தலில் கருணா போட்டியிட வேண்டும்

### ஜனாதிபதி மகிந்த அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனை (கருணா) தேசியப் பட்டியலில் சேர்க்க முடியாது என சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட கருணா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவராவார். தமிழ் மக்கள் விரும்பிய தலைவரைத் தெரிவு செய்ய அந்த மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்பதால் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறுமாறு ஜனாதிபதி கருணாவுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இதனடிப்படையில் கருணா எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தில் (15 ஆம் பக்கம் பார்க்க)

# வகுப்பறைக் கட்டிடத் தொகுதிகள் ஆளுநரால் இன்றும் நாளையும் திறப்பு

யாழ்.மாவட்டத்தில் 12பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைகளின் கட்டிடத் தொகுதியை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி இன்றும், நாளையும் திறந்து வைப்பார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, யாழ்.சென். மேரிஸ் கல்லூரி, கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, உரும்பிராய் ஞானபால வித்தியாலயம் மற்றும் சில்லாலை ஆர்.ரி.எம்.எஸ் ஆகிய பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டிடத் தொகுதி இன்று திறந்து வைக்கப்படுகிறது.

அத்துடன் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம், ஏழாலை மகா வித்தியாலயம், இமயாணன் ஜி.ரி.எம்.எஸ், வடமராட்சி ஞானாசாரியர் மற்றும் வல்வை மகளிர் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டிடத் தொகுதியை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி நாளை திறந்து வைக்கின்றார். (ரி)

# கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழாவை கொண்டாட ஏற்பாடு

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா இம்மாதம் 28ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

யுத்தத்தின் காரணமாக சில ஆண்டுகள் கொண்டாடப்படாத இவ் விழா இம்முறை யாழ்.ஆயரின் வேண்டுதலால் கொண்டாட பாதுகாப்பு அமைச்சு அனுமதி அளித்துள்ளது.

எனவே இவ் விழாவுக்கு செல்ல இருக்கும் பக்தர்கள் 27ஆம் திகதி காலை 6மணி தொடக்கம் தங்கள் பயணத்தை மேற்கொள்ளலாம்.

யாழில் இருந்து செல்லும் பக்தர்கள் குறிகாட்டுவான் துறை முகத்தில் இருந்து கச்சதீவை நோக்கி பயணிக்கலாம். அங்கு செல்லும் பக்தர்கள் 27ஆம் திகதி இரவு அங்கு தங்கி 28ஆம் திகதி திருவிழாவைபூர்த்திசெய்துகொண்டு அன்று மாலை 6மணிக்கு முன் தங்கள் இருப்பிடம் திரும்புவதற்கான வசதிகள் யாழ்.அரச அதிபரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் இருந்து பயணிக்கும் பக்தர்கள் அங்கிருந்து தங்கள் பயணங்களை மேற்கொள்ள முடியும்.

பக்தர்கள் தங்கள் உணவு, குடிநீர் என்பவற்றை தங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டப்படுகின்றார்கள். 27ஆம் திகதி மாலை 4.30க்கு நற்கருணை வழிபாடும், மறுநாள் 28ஆம் திகதி காலை 7.15க்கு திருநாள் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

இவ் விழாவுக்கு பயணம் செல்ல உள்ள பக்தர்கள் பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை அவர்களின் பங்குத்தந்தையர்களிடம் சமர்ப்பித்து அவர்களுடைய உறுதிப்படுத்தலுடன் பயணங்களை மேற்கொள்ள முடியும் என யாழ்.ஆயரின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ச)

## நன்றி நவிலல்



விக்ரர் அருள்தாசன் திருவிழி

*2010.02.09 அன்று அகால மரணம் அடைந்த எங்களின் பிரியமான உறவுகள் விக்ரர் அருள்தாசன், திருவிழி (யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட 1ஆம் வருட மாணவர்கள்) ஆகியோரின் மரணச் செய்தி கேட்டு உடனடியாக உதவிய யாவருக்கும், பல்கலைக்கழக சமூகத்தினருக்கும், கரித்தாஸ் நிறுவனத்தினருக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர், மலர் அஞ்சலி, மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர் பல வழிகளிலும் ஆதரவு வழங்கியோர் மற்றும் இன்றுவரை ஆறுதல் வழங்கிக் கொண்டிருக்கும் அனைவருக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

180, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

நன்றியுடன்
பெற்றோர்.

(234)


## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்

## பதவி வெற்றிடம்

களஞ்சிய முகாமையாளர்

1. சம்பள குறியீட்டு இல. : 208/16
2. சம்பளத் திட்டம் : 9200-70X10-75X10-10650.
3. வயது எல்லை : 25-45 வரை
4. விண்ணப்ப முடிவு திகதி: 05.03.2010
5. 1. சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   2. சங்கப் பணியாளர்கட்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.
   3. வேறு சங்கங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டும்.
   4. சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
6. தகைமைகள்
   அ. கூட்டுறவுப் பணியாளரின் 17ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.
   அல்லது
   ஆ. கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தர) பத்திரம்/ க.பொ.த. (சாதாரண தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம்/ வர்த்தக எண் கணிதம்/ தூய கணிதம், சிங்களம்/ தமிழ் பாஷை என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தி.
7. விண்ணப்பங்கள் யாவும் 'பொது முகாமையாளர், ஊர்காவற்துறை ப.நோ.கூ. சங்கம், ஊர்காவற்றுறை' என்ற முகவரிக்கு நேரிலோ, பதிவுத்தபாலிலோ 05.03.2010 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர்,
ஊர்.ப.நோ.கூ.சங்கம்.

(C-4457)


# பாடசாலை கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் வடக்கின் வசந்தம் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மேல்மாடிக் கட்டடத்தின் திறப்புவிழா இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ஞா.அன்ரன் பிறேமதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவனும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-14)


## S.L.A.S விசேட கருத்தரங்கு

இன்று (வியாழன்) பிற்பகல் 2.00மணி-6.00மணி வரை, நாளை (வெள்ளி) 9.00மணி-4.00மணி வரை.

**யாழ்ப்பாணக் கல்லூரி**
**பட்டப்படிப்புகள் பிரிவு**
(யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக)

(C-4466)

## தேவை

பழைய காட்போட் 1Kg 5/=, பழைய பிளாஸ்டிக் கதிரை கிலோ 20/=, கொப்பி, புத்தகங்கள், பத்திரிகைகள் கூடிய விலைக்கு வாங்கப்படும்.

**நிஹோன் டிரேடர்ஸ்**
வைத்தீஸ்வரா பாடசாலைச் சந்தி,
204,மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (435)


# நூல்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் நூலகங்களுக்கான நூல்கள் வழங்கும் நிகழ்வு நாளை காலை 10மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, பாடசாலை அதிபர்களிடம் நூல்களைக் கையளிக்கவுள்ளார். இதேவேளை வேலணையில் இன்று காலை 10மணிக்கு பாடசாலை மாணவர்களுக்கான கணனி வள நிலையம் ஒன்று வடக்கு மாகாண ஆளுநரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (ச-5)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்னாள் அதிபர் ஒறேற்றர் சி.சுப்பிரமணியத்தின் 16ஆவது நினைவுப் பேருரை நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30மணிக்கு கல்லூரிமண்டபத்தில் அதிபர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நினைவுப் பேருரையினை விஞ்ஞானத்தில் தூக்கம் (நித்திரை) பற்றிய சிந்தனை எனும் பொருளில் சிங்கப்பூர் பொதுவைத்தியசாலை சிரேஷ்ட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி கதிரவேலு புவனேந்திரன் நிகழ்த்தவுள்ளார். (ச-14)

## சிறுவர் பாதுகாப்பு கொள்கைப் பிரகடனம்

கரித்தாஸ் கியூடெக் நிறுவனமும், கரித்தாஸ்-செடெக் நிறுவனமும் இணைந்த இலங்கை கரித்தாஸ் சிறுவர் பாதுகாப்பு கொள்கை பிரகடன நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் அச்சுக்கூட வீதியிலுள்ள புனித பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் கி.ஜோ.ஜெயக்குமார் அடிகளார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினராக இலங்கை கரித்தாஸ்-செடெக் தேசிய இயக்குநர் ஜோர்ச் சிகாமணியும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-14)

## பேசும் படம்



இனியும் தொடருமா...?


## கோகுல் ரவல்ஸ் Hokul Travels

திருமண வைபவங்களுக்கான குளிரூட்டப்பட்ட சொகுசு கார், வான் மற்றும் பஸ் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:-
021 222 8984, 077 3747825, 077 6152992

(C-4449)

## அம்பிகை திருமண பொருத்துநர்

உள்நாடு, வெளிநாடு உட்பட டாக்டர், என்ஜினியர், ஆசிரியர், சிறுதொழில் பார்ப்போர், வியாபாரிகள் உட்பட பொருத்தமான மணமகன், மணமகள் எம்மிடம் உண்டு.

அத்துடன் ஆண், பெண் இருவர் சாதகமும் பொருத்தம் பார்த்தும் எழுதிக் கொடுக்கப்படும். சாதக கொப்பி எழுதிக் கொடுக்கப்படும்.

T.P:- 021 7902151
077 4103597

அம்பிகை திருமண பொருத்துநர்,
கீரிமலை வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

உரிமையாளர்:-உதயகுமார் லலிதாம்பிகை.

(C-4465)

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

**மீண்டும் யாழில்**

**15.02.2010 முதல் நேரில் சந்திக்கலாம்**

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம், நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபோகுதல், குழந்தைப்பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு), (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

மானிப்பாய் வீதியிலிருந்து "செல்வமாளிகை"

இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.
T.P:- 071 9315664, 077 7569205

(C-4451)

# இன்று ஒரு தகவல்

## பூட்டைத்திறக்க வேண்டும்

ஒரு நாட்டில் ஒரு மன்னர் இருந்தார்.

அவர் நாட்டின் நிர்வாகத்தை கவனிப்பதற்காக ஒரு முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க தீர்மானித்தார்.

எப்படித் தேர்ந்தெடுப்பது?

ஏற்கனவே அங்கே அமைச்சர்கள் பலர் இருந்தனர்.

அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அதனால் மன்னர் அவர்களைக் கவனித்தார். நால்வருக்கு அந்தத்தகுதி இருந்தது.

அவர்களில் ஒருவரை எப்படித் தேர்ந்தெடுப்பது? அவர்கள் நால்வருக்கும் பொதுவாக ஒரு போட்டி வைத்து அதில் யார் ஜெயிக்கிறார்களோ அவர்களுக்கு முதலமைச்சர் பதவியைக் கொடுத்து விடலாம் என்று முடிவு செய்தார்.

ஒருநாள் காலையில் அந்த நான்கு பேரையும் கூப்பிட்டார்.

அவர்களிடம் சொன்னார்.

"இதோ பாருங்கள். என்னிடம் ஒரு பூட்டு இருக்கிறது. அது சாதாரண பூட்டு இல்லை. எண்கணித முறைப்படி வடிவமைக்கப்பட்ட விஞ்ஞானப் பூட்டு.

நாளைக்குக் காலையில் உங்களிடம் அந்தப் பூட்டைக் கொண்டு வந்து கொடுப்பேன்.

ஒவ்வொருவருக்கும் அந்தப் பூட்டைத் திறப்பதற்கு வாய்ப்புக் கொடுக்கப்படும்.

யார் அந்தப்பூட்டைக் குறைவான நேரத்தில் திறக்கிறார்களோ அவர் தான் இந்த நாட்டின் முதலமைச்சர்" என்றார்.

இதைக் கேட்டதும் அந்த நான்கு பேருக்கும் நிம்மதியே இல்லை. இரவு முழுதும் தூங்கவில்லை. விடியவிடிய பூட்டு சம்பந்தமான ஓலைச்சுவடிகள் எல்லாவற்றையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தனர்.

கணிதம் சம்பந்தமான குறிப்புக்களையெல்லாம் விழுந்து விழுந்து படித்தார்கள்.

அவசரத்தில் அவர்களுக்கு ஒன்றும் சரியாக புரியவில்லை. அவர்கள் தேடிய விபரமும் சரியாகக் கிடைக்கவில்லை. முதலமைச்சர் ஆக வேண்டும் என்ற ஆசையில் அவர்களால் எதையும் நிதானமாக சிந்திக்க முடியவில்லை.

அந்த நால்வரில் ஒருத்தர் மட்டும் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் சில ஓலைச்சுவடிகளை மட்டும் புரட்டிப் பார்த்து விட்டு தூங்கப் போய் விட்டார்.

அவர் மட்டும் தான் கொஞ்சம் நிம்மதியாகத் தூங்கினார். மறுநாள் விடிந்தது.

மன்னர் அரசவையில் வந்து அமர்ந்தார். இவர்கள் நால்வரும் வந்து சேர்ந்தார்கள்.

ஒரு பெரிய பிரமாண்டமான பூட்டை சேவகர்கள் தூக்கிக் கொண்டு வந்து மன்னர் முன் வைத்தனர்.

ஓ... இவ்வளவு பெரிய பூட்டா?

நான்கு பேரும் அதை ஆச்சரியமாகப் பார்த்தனர்.

எல்லோருடைய படபடப்பும் இன்னும் அதிகமாகியது. அவசர அவசரமாக கையிலிருந்த ஓலைச்சுவடிகளைப் புரட்டினார்கள். அதன் பின் பூட்டைப் பார்த்தார்கள்.

ஏதேதோ முயற்சி பண்ணிப் பார்த்தார்கள். எதுவும் சரியாகப்படவில்லை. தோல்வியை ஒப்புக் கொண்டனர்.

கடைசியாக இரவு நிம்மதியாக தூங்கினாரே அந்த அமைச்சர் வந்தார்.

பூட்டுக்குப் பக்கத்தில் நின்று குனிந்து பார்த்தார். என்ன ஆச்சரியம்?

ஏற்கனவே அந்தப் பூட்டு திறந்தே தான் இருந்தது.

சாவியும் தேவைப்படவில்லை.

கணிதமும் தேவைப்படவில்லை.

அவர் சுலபமாக அந்த பூட்டைத் திறந்தார்.

அவர்தான் முதலமைச்சர் என்று அறிவித்தார் மன்னர்.

இந்தக் கதையிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில்...

ஒரு பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் முதலில் பிரச்சினையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மனம் பதற்றப்படக் கூடாது.

நிதானமாக இருக்க வேண்டும்.

ஒரு நிர்வாகம் சிறப்பாக செயல்பட இந்தப் பண்புகள் முக்கியமாகத் தேவை.

நிர்வாகம் என்பது நாட்டு நிர்வாகம் மட்டும் தான் என்பதில்லை.

குடும்ப நிர்வாகமும் அதில் அடங்கும்.

குடும்பத்திலிருப்பவர்களுக்கும் பிரச்சினைகள் வரும். முதலில் என்ன பிரச்சினை என்பதைப் புரிந்து கொண்டு அதன் பின் அதை எப்படித் தீர்க்கலாம் என்று யோசிக்க வேண்டும்.

ஒரு குடும்பத்தலைவர் கவலையுடன் வந்தார்.

"என்னகாரணம்?" என்று விசாரித்தார் நண்பர்.

"வீட்டில் பிரச்சினை" என்றார்.

அவருக்கு இந்தப் பூட்டுக் கதையை விபரமாகச் சொல்லி முடித்தார் நண்பர். கேட்டு விட்டு அவர்,


"எங்கள் வீட்டில் பூட்டு பிரச்சினை இல்லை. சாவிதான் பிரச்சினை" என்றார்.

"என்ன சொல்றீங்க?" என்றார் அவர்.

"பெட்டியோட சாவி எப்பொழுதும் மனைவியின் கையில் தான் இருக்கிறது.

அவளுக்கு தெரியாமல் அதை எப்படி எடுப்பது என்பது தான் என் பிரச்சினை!" என்றார் பரிதாபமாக!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*



அளவெட்டி அருணாசல வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தரம் 1 கால்கோள் விழாவின் போது அதிபர் கு. ஜெகநாதன் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்னிந்தியத் திருச்சபை அளவெட்டி குரு முதல்வர் வண். ஏ.ஈ. சுரேந்திரன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களையும் படத்தில் காணலாம்.

## கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பதிவாளர் அலுவலக நடவடிக்கைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பதிவாளர் நாயகத்தின் கீழ் இயங்கும் கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களின் பதிவாளர் அலுவலகங்கள் அவ்வவ் மாவட்டங்களில் இயங்கவுள்ளது.

இவ் அலுவலகங்கள் ஊடாக அவ் மாவட்டங்களின் இறப்பு, பிறப்பு நடவடிக்கைகள் கணனிமயப்படுத்தல் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் கடந்த ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தினால் மரணமடைந்தவர்களின் உறவினர்கள் அவர்களின் இறப்புத் தொடர்பான மரண விசாரணைக் குறிப்பினை சமர்ப்பிக்குமிடத்து அதன் அடிப்படையில் இறப்புக்கள் பதிவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இறப்பு தொடர்பான குறிப்பு இல்லாதவர்கள் ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து அவர்களின் அறிக்கையைப் பெற்று வவுனியா மாவட்ட நீதிவான் மூலம் சமர்ப்பிக்கின்ற அறிக்கையின் அடிப்படையில் இறப்புக்கள் பதிவு செய்யப்படவுள்ளது.

மேலும் காணாமற்போனவர்கள் தொடர்பில் பதிவாளர் நாயகத்தின் சுற்றறிக்கை கிடைக்கப்பெற்றதும் பதிவுகள் மேற்கொள்ளப்படுமென வடமாகாண உதவி பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

(6-7-ப)

## இராசி பலன்

*18-02-2010 (மாசி 6, வியாழக்கிழமை)*
*சதுர்த்தி பிற்பகல் 2.39 மணிவரை*
*ரேவதி பின்னிரவு 2.45 மணிவரை*
*இராகுகாலம் 2.02-3.32 மணிவரை*
*சுபநேரம் 8.02-9.32 மணிவரை*
*புலோலி தெற்கு முதலியம்மன் கொடி, சதுர்த்தி விரதம், சித்தாமிர்தம்.*

| | |
|---|---|
| மேடம் | சுப காரியச் செலவு, பெரியோர் உதவி, சயனசுகக் குறைவு, திடீர்பயணம். |
| இடபம் | தனதானிய சேர்க்கை, கலந்துரையாடல், காரிய நன்மை, புதிய திருப்பம். |
| மிதுனம் | இனிய தகவல், நண்பர்கள் உதவி, உற்சாகம், ஆரோக்கிய நிலை. |
| கடகம் | தந்தைவழி உறவு, சரீரப் பிரயாசை, பயணம், ஆன்றோர் வழி நன்மை. |
| சிங்கம் | வீண் தொல்லை, பிரயாண பயம், முயற்சி தாமதம், போசன சுகம். |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம், கீர்த்தி. |
| துலாம் | காரிய நன்மை, போசன சுகம், செல்வாக்கு, நல்ல செய்தி. |
| விருச்சிகம் | குடும்பக் கவலை, தொழிலில் ஆர்வம், காரியதாமதம், தன விரயம். |
| தனுசு | தொழில் நன்மை, நல்லசெய்தி, நல்ல முயற்சி, உறவினர் வருகை. |
| மகரம் | நல்ல செய்தி, போசன சுகம், எடுத்த காரியம் கைகூடும், தன்னம்பிக்கை. |
| கும்பம் | விவாதம், முயற்சி தாமதம், சிந்தனை மிகுதி, தனவிரயம். |
| மீனம் | தெய்வ தரிசனம், சயனசுகம், உறவினர் வருகை, காரிய சிந்தை. |

வளவன்

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய பாடசாலைகளில் தரம் 9இல் கல்வி கற்பிக்கும் சித்திரப்பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த ஆசிரியர்களை இச்செயலமர்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்துள்ளார். (6-7-ப)

## உருவச்சிலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் கலைமகள் உருவச்சிலை திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் தி. சத்தியபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராஜா கலந்துகொள்ளவுள்ளார். (6-4)

## க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் செயல்முறைப் பரீட்சைகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 2009ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் சங்கீதம், நடனம் மற்றும் நாடகம் ஆகிய பாடங்களின் செயல்முறைப் பரீட்சைகள் இன்று ஆரம்பமாகவுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மற்றும் இரண்டாம் தடவையாக தோற்றுகின்ற பரீட்சார்த்திகள் அனைவரும் இச்செயல்முறைப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் எனவும் இப்பரீட்சையில் தோற்றாதவர்களின் பெறுபேறுகள் அனுப்பப்பட மாட்டாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.


மேலும் இப்பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இடம்பெயர்ந்த மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைகளில் அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-7-ப)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 110 |
| தக்காளி | 110 | 120 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 55 | 70 | 50 |
| கரட் | 100 | 110 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 |
| புடோல் | 80 | 90 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 80 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 100 | 110 | 50 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 30 |
| பயிற்றங்காய் | 100 | 110 | 100 |
| லீக்ஸ் | 60 | 70 | 80 |
| பீற்றூட் | 80 | 90 | 80 |
| கறிமிளகாய் | 170 | 180 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 450 | 400 |
| போஞ்சி | 100 | 110 | 120 |
| கத்தரி தம்புள்ள | 30 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 60 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 35 | 30 |

# ஆளும் கட்சிக்குத் தாவிய ஐ.தே.க சிரேஷ்ட உறுப்பினர்கள் ஓரம்கட்டப்பட்டுள்ளனர்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



ஆளும் கட்சிக்குத் தாவிய ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பொதுத் தேர்தலின்போது ஓரங்கட்டப்பட்டுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கிளர்ச்சி குழுவினருக்கு ஆளும் கட்சி முக்கிய பொறுப்புக்களை வழங்கவில்லை எனக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சிக்குத் துரோகம் இழைத்த நபர்களுக்கு அரசாங்கம் நல்ல பாடம் புகட்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக ஆளும் கட்சி மாவட்டத் தலைவர்களைத் தெரிவு செய்திருந்ததாகவும் இந்தத் தெரிவின் போது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தாவிய முக்கிஸ்தர்கள் ஓரம்கட்டப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுத் தேர்தலுக்கான மாவட்டத் தலைவர் தெரிவின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மாவட்டத் தலைவர்கள் பட்டியலில் டாக்டர் சரத் அமுனுகமவின் பெயர் மட்டுமே இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களான டாக்டர் ராஜித சேனாரட்ன, காமினி லொக்குகே, கெஹலிய ரம்புக்வெல்ல, ரோஹித்த பொகொல்லாகம, பந்துல குணவர்தன, மகிந்த சமரசிங்க, மனோ விஜேரட்ன, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட மற்றும் பி. தயாரட்ன ஆகியோருக்கு மாவட்டத் தலைவர் பதவிகள் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதித் தேர்தலின்போது இறுதி நேரத்தில் ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவிற்குக்கூட மாவட்டத் தலைவர் பதவி வழங்கப்படவில்லை.

எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது மாவட்ட ரீதியில் சிறந்த திறமைகளை வெளிப்படுத்தும் தலைவர்களுக்கு அமைச்சரவைப் பொறுப்புக்களில் முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே சந்தர்ப்பம் கிட்டாத ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சற்று அதிருப்தியுடன் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுயலாப நோக்கங்களுக்காகத் தேர்தலில் போட்டியிடும் அரசியல்வாதிகளை மக்கள் நிச்சயமாக நிராகரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

## மிதிவெடி அபாயம் குறித்த நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வோதய நிறுவனத்தினால் மிதிவெடி அபாயக் கல்வித் திட்டம் தொடர்பான நாடக ஆற்றுகை நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு குருநகரில் அமைந்துள்ள 5ஆம் மாடி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக சர்வோதய நிறுவனப் பணியாளர்களினால் நாளை மறுதினம் முதல் 28ஆம் திகதி வரை தொடர்ந்து 10 நாட்களுக்கு இந்நாடக ஆற்றுகை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(6-30)

## தோடம்பழத்தில் இருந்து செயற்கை தோல் தயாரிப்பு

(சியோல்)

தென்கொரியாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தோடம்பழம் மற்றும் சிசிலிப்பழம் போன்றவற்றைப் பயுன்படுத்தி செயற்கை தோல் மற்றும் அழகு சாதனப் பொருட்களைத் தயாரித்துள்ளனர்.

அவற்றில் இருந்து வெளியாகும் சிட்ரஸ் சீ 623-2 என்ற பாக்டீரியா மூலம் வேதியியல் மாற்றம் செய்யப்பட்டு செலுலஸ் ஜெல் ஆக மாற்றம் செய்யப்படுகிறது. அதில் இருந்து செயற்கை தோல் தயாரிக்கப்படுகிறது.

இது மனிதர்களின் உடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் இதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் இந்த செயற்கை தோல் பயன்படுத்துவதால் எந்தவித தொற்று நேர்யும் ஏற்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீக்காயம் பட்ட இடத்தில் ஒரு வருடத்திற்குள் இந்த செயற்கை தோலை பொருத்த முடியும். தற்போது இது ஆய்வில் உள்ளது. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் உபயோகத்துக்கு வரும். இந்த செயற்கை தோல் இயற்கையான பயோ பாலிமரில் இருந்து தயாரிக்கப்படுகிறது. இதனால் பாக்டீரியாவினால் பாதிப்பு எதுவும் ஏற்படாது என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (6)

## வேட்பு மனுத் தாக்கல் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் நாளை ஆரம்பமாகவுள்ளது.

தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சிகள் நாளை முதல் எதிர்வரும் 26ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்பு மனுத் தாக்கல் செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 26ஆம் திகதி நண்பகல் 1.30 மணிக்கு பின்னர் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்கள் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட வேட்பு மனு சார்பாக இறுதி முடிவுகள் வெளியிடப்படவுள்ளதாகத் தெரிகிறது.

(6-7-ப)

## மிதிவெடியகற்றும் பணிகளுக்காக அவுஸ்திரேலியா ஐந்து தன்னியக்க இயந்திரங்கள் அன்பளிப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலிய அரசாங்கம் மிதிவெடிகளை அகற்றும் பணிகளை மேற்கொள்ள சுமார் 250 மில்லியன் ரூபா பெறுமதியான ஐந்து தன்னியக்க இயந்திரங்களை அன்பளிப்பாக இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இலங்கையின் வடபகுதியில் நிலக்கண்ணி வெடிகள், மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்குடன் இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஸ்லோவேக்கியா நாட்டுத் தயாரிப்பான பொஸேனா 4 ரக ஐந்து இயந்திரங்களும் நேற்று முன்தினம் தேச நிர்மாண அமைச்சின் செயலாளரிடம் இலங்கைக்கான அவுஸ்திரேலியா தூதுவர் கையளித்தார்.

கொழும்பு காலி முகத்திடலுக்கு முன்னால் அமைந்துள்ள அமரர் பண்டார நாயக்கவின் உருவச்சிலைக்கருகே கையளிப்பு வைபவம் நடைபெற்றது.

மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி நீல் பூனே உட்பட ஐ.நா. வின் நிலக்கண்ணி வெடிகள் அகற்றும் மனிதாபிமான அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட அவுஸ்திரேலிய தூதரகத்தின் பிரதிநிதிகளும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (6)


## பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கோரல்

யாழ்.கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப்பிரிவின் அனுசரணையுடன் யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியில் **அழகுக் கலை பயிற்சிநெறி** (ஐசிங், தலை அலங்காரம், தையல், கைத்தொலைபேசி திருத்துதல்) ஆகிய பயிற்சி நெறிகள் **01.03.2010 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு** ஆரம்பிக்கப்படவுள்ளதால் விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை கல்லூரியின் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதிபர்

(சி-4460)


## இலங்கையிலிருந்து குழந்தையை கடத்த முயன்றோருக்கு நெதர்லாந்தில் சிறைத்தண்டனை

(கொழும்பு)

இலங்கையில் இருந்து குழந்தை ஒன்றைக் கடத்தி வர முற்பட்டமைக்காக நெதர்லாந்து பெண் உட்பட மூன்று பேருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் போலி ஆவணங்கள் தயாரித்து,இந்தக் குழந்தையை கடத்தி வர முற்பட்டதாக சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.


இதில் முக்கிய பிரதிவாதியான பெண்ணுக்கு 189 நாட்கள் சிறைத்தண்டனையும் மற்றும் ஒருவருக்கு 134 நாட்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் , குறித்த இருவருக்கும் போலி ஆணவங்களைத் தயாரித்து வழங்கியதாகக் கூறப்படும் ஒருவருக்கு 6 நாட்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

(6)







சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவர்களின் அணி வகுப்பையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பொறியியலாளர் சோ. அனந்தசயனன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

# மனித உரிமை விடயங்களில் முன்னேற்றங்களை வெளிப்படுத்தி வரிச் சலுகையைப் பெற முயற்சிப்போம்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

இலங்கைக்கான ஜி.எஸ். பி. பிளஸ் வரிச் சலுகைத் திட்டத்தை இடைநிறுத்துவது தொடர்பான தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ளது. எனினும் நாட்டில் மனித உரிமை விடயங்களில் முன்னேற்றங்களை வெளிப்படுத்தி நாங்கள் குறித்த சலுகையைப் பெற இராஜதந்திர ரீதியில் முயற்சிகளை மேற்கொள்வோம் என்று மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை இடைநிறுத்துவதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் மகிந்த சமரசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது; இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை நிறுத்துவது என்று ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது. எனினும் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை முற்றாக இழந்துவிட்டதாக நாம் கருத வேண்டியதில்லை. அது தொடர்பான நம்பிக்கையை நாம் இன்னும் கைவிட வேண்டியதில்லை.

காரணம் அவ்வாறு ஒரு தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ள போதிலும் மேலும் ஆறு மாத காலத்துக்குள் நாங்கள் அந்தச் சலுகையை அனுபவிக்கலாம். அது தான் நடைமுறையாகவுள்ளது. அதாவது சலுகையை இடை நிறுத்துவதாக தீர்மானித்த தினத்திலிருந்து ஆறு மாதங்களுக்கு அதனை நாங்கள் அனுபவிக்கலாம்.

மேலும் அவ்வாறான நிலைமையில் குறித்த ஆறு மாத காலப் பகுதியில் இலங்கை அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இராஜதந்திர ரீதியிலான பேச்சுக்களை நடத்தி ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ள முயற்சி எடுக்கும். அந்த நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

அதற்காக நாங்கள் எமது தரப்பில் பல முன்னேற்றங்களைக் காட்டவேண்டும். அவற்றை வெளிக்காட்டுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். முக்கியமாக மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு நாங்கள் தற்போது தேசிய செயற்பாட்டு வேலைத் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளோம்.

அந்தத் திட்டத்தின் முதற்கட்ட வரைபு தற்போது பரிசீலனையில் உள்ளது. இது தொடர்பில் விரைவில் ஐரோப்பிய ஒன்றித்துக்கு தெளிவாக விளக்கவுள்ளோம்.

மேலும் இடம்பெயர்ந்துள்ள மக்களை மிகவிரைவாக மீள்குடியேற்றி வருகின்றோம். அத்துடன் அதிக மக்களுக்கு சுதந்திர நடமாட்டத்துக்கான அனுமதியை வழங்கியுள்ளோம். எனவே இவ்வாறான வேலைத் திட்டங்கள் மூலம் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மேலும் சில வருடங்களுக்காக பெற முயற்சிகளை மேற்கொள்வோம் என அவர் தெரிவித்துள்ளார். (6)

# கடந்தாண்டில் சிறுவர்களுக்கு எதிராக பல குற்றச் செயல்கள் பதிவு

(கொழும்பு)

சிறுவர்களுக்கு எதிராக இடம் பெற்ற 3 ஆயிரத்து 248 குற்றச் செயல்கள் தொடர்பாக கடந்தாண்டில் பொலிசாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவற்றுள் 2 ஆயிரத்து 162 குற்றச்செயல்கள் பாரதூரமானவையெனவும் அவை தொடர்பான வழக்கு விசாரணைகள் மேல் நீதிமன்றத்தில் இடம்பெறுவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பாலியல் வல்லுறவு, கடத்தல்கள், காயப்படுத்தப்பட்டமை உட்பட பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பாக இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சிறுவர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் இடம்பெற்றால் அவை தொடர்பான தகவல்களைச் சிறுவர் மற்றும் மகளிருக்கான பொலிஸ் பணியகத்தின் 24 மணி நேரமும் இயங்கும் 0112444444 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக முறைப்பாடுகளைச் செய்ய முடியுமென பொலிசார் தெரிவித்துள்ளனர்.

(6)

# இராணுவ உயர் பதவிகளில் மீண்டும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது

## திவயின செய்தி

(கொழும்பு)

இராணுவ உயர் பதவிகளில் மீண்டும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவப் படையைச் சேர்ந்த 62 உயர் அதிகாரிகளின் பதவிகளில் மாற்றம் கொண்டு வரப்பட் டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

15 பிரிகேடியர்கள், 24 கேணல்கள் மற்றும் 23 லெப்டினன் கேணல்கள் தர அதிகாரிகளுக்கே இவ்வாறு புதிய பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மைக்காலத்தில் இராணுவ நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது (6)

# உலகில் வசதிகள் குறைந்த நகரமாக கொழும்பு நகரம் தரப்படுத்தல்

உலகில் வசதிகளும் ஆரோக்கியமும் கொண்ட நகரங்களின் தரப்படுத்தல் பட்டியலில் இறுதியாகவுள்ள 10 நகரங்களில் இலங்கையின் தலைநகர் கொழும்பு நகரமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

த எக்கோனோமிஸ்ட என்ற சஞ்சிகையின் தரப்பட்டியலின் படி சிம்பாப்வேயின் ஹராரே, பங்களாதேசின் டாக்கா, பாகிஸ்தானின் கராச்சி, ஈரானின் தெஹ்ரான் ஆகிய நகரங்களும் இந்த கடைசி 10 இடங்களில் உள்ளடங்கியுள்ளன.

இந்தப் பட்டியலில் கனடா மற்றும் அவுஸ்திரேலிய நகரங்கள் முதல் 10 இடங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த சஞ்சிகையின் தரவுப்படி கனடாவின் வான்கூவர் நகரம் இந்தப்பட்டியலில் முதல் இடத்தை பெற்றுள்ளது.

இதனை தவிர கனடாவின் ரொறன்ரோ கல்கரி, அவுஸ்திரேலியாவின் சிட்னி, மெல்போர்ன், பேர்த் மற்றும் பின்லாந்தின் ஹெல்சிங்கி போன்ற நகரங்களும் உள்ளடங்கியுள்ளன.

சுகாதாரம், கலாசாரம், சுற்றாடல், கல்வி மற்றும் உட்கட்டமைப்பு என்ற அடிப்படையிலேயே இந்த நகரங்கள் தரப்படுத்தப்பட்டுள்ளன.

(6)


வெளிநாட்டு வேலை வாய்ப்பு

KURDISTAN

குர்திஸ்தான் நாட்டின் தலைநகர் ERBIL சர்வதேச விமான நிலையத்தில்

(ERBIL INTERNATIONAL AIRPORT)

உடனடி வேலை வாய்ப்பு

14 நாட்களுள் வீசா பெற்று பயணம் மேற்கொள்ளலாம்.

வெளிநாட்டு முகவருடன் நேர்முகப் பரீட்சை

23.02.2010 (செவ்வாய்கிழமை).

CLEANERS - AIR PORT - REQ No.100

100 விமானநிலைய கிளீனேர்ஸ்.

மாதச் சம்பளம் ரூபா.28,750/= + மேலதிக கொடுப்பனவு உண்டு.

MONTHLY SALARY - US$ 250/-

(S.L.Rs.28,750/=)+ O.T Available.

✵ தங்குமிட வசதி இலவசம் ✵ உணவு இலவசம் ✵ மருத்துவ வசதி இலவசம்.

✵ ஒப்பந்தக்காலம் 3 வருடங்கள் (புதுப்பிக்கத்தக்கது).

வயது: 21+ தொடக்கம் 32 வரை.

தயவுசெய்து இங்கு குறிப்பிடும் தொலைபேசி மூலம் எமது MR.R.Guna (குணா) என்பவருடன் தொடர்பு கொண்டு முன் பதிவு செய்து நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பு வரவும் .

மொபைல்: 077-826 3228 (யாழ்ப்பாணம்).

Terms & Conditions

Free Accommodation, Free Food & Medicals. Free Uniform & Air Passage after completion of contract period. Period of Contract three years (Renewable). Other terms & conditions will be as per Kurdistan Government Labour Laws.

உங்களது பாஸ்போர் (எல்லா நாட்டுக்குமான-ALL COUNTRIES), 12 பாஸ்போர்ட் Size கலர் படங்களுடனும் (White Background) 23.02.2010 செவ்வாய்கிழமை கொழும்பில் 375, டாம் வீதியில் உள்ள எமது காரியாலயத்திற்கு நேரில் வரவும். ஆங்கில அறிவு அதிகம் வேலையில்லை. இது ஓர் அரிய சந்தர்ப்பம் தவற விடாதீர்கள்.

கடந்த 15 வருடங்களாக எமது நிறுவனம் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மற்றும் பல நாடுகளுக்கும் சிறந்த கம்பனிகளுக்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

☆ குர்திஸ்தான் ஒரு எண்ணை (Petrol) வளமுள்ள நாடு.☆

இலங்கையர் தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்வதற்கு இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நாடு

TRANSSTAR

INTERNATIONAL TRAVELS & TOURS (PVT) LTD.,

375, Second Floor, Dam Street, Colombo 12.

(375, 2ம் மாடி, டாம் வீதி, கொழும்பு-12)

Tel: 011 - 471 8936 Mobile: 077-826 3228

S.L.Bureau Labour Licence : 1311.

S.L.Bureau Approval AL/1311/Advt/02/10.


(Near Hulftsdorp Courts - Colombo)

(ஹல்ஸ்டொர்ப் நீதிமன்றங்களுக்கு அருகாமையில்)

(டாம் வீதியில் உள்ள ஹல்ஸ்டொர்ப் தபால் நிலையத்திற்கு அடுத்த கட்டிடம்)

# நீரிழிவை வெற்றிகொள்வோம்

நீரிழிவு நோயானது சலரோகம், DIABETES (டயபிடிஸ்), 'சீனி வருத்தம்' எனப்பலராலும் பலவாறு அழைக்கப்படுகின்றது. இந்நோயானது உலகளாவிய ரீதியில் ஏழைபணக்காரன், ஆண் பெண், இனமத வேறுபாடின்றி அனைவரையும் வருத்துகின்ற நோயாக மாறி விட்டது.




அண்ணளவாக 194 மில்லியன் மக்களை பீடித்துள்ள இந்நோயானது நடுத்தர வயதுடையோரையே அதிகளவு பாதித்துள்ளது. இந்நோயானது 2030ஆம் ஆண்டில் 366 மில்லியனைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு 10 செக்கனிற்கும் இந்நோயானது இருவரைப் பாதிக்கின்றது. ஒருவரைக் காவு கொள்கின்றது. அத்துடன் அனைத்து நோய்களின் இறப்பு வீதத்துடன் ஒப்பிடுகையில் இது நான்காவது இடத்தைப் பிடிக்கின்றது.

இலங்கையிலும் இந்நோய் பரவலாகக் காணப்படுகின்றது. எனினும் சரியான தகவல்கள் எதுவும் சேகரிப்பதற்கான வசதிகள் எதுவும் நடைமுறையில் இல்லை. இறுதியாக 2005ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 14.5% மான ஆண்களும் 13.5% மான பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். உலக சுகாதார நிறுவனத்தின் மதிப்பீட்டின் படி 2 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உடலினால் குருதியில் உள்ள குளுக்கோஸின் அளவை கட்டுப்படுத்தவென சுரக்கப்படும் இன்சுலின் ஏனும் ஓமோனின் தொழிற்பாட்டில் அல்லது அதன் சுரப்பில் ஏற்படும் பகுதியளவிலான அல்லது முற்றான செயலிழப்பே நீரிழிவு நோயாகும்.

இவ் நீரிழிவு நோய் பிரதானமாக இரு வகைப்படும்.

**அவையாவன:**


Type I or வகை I

Type II or வகை II

வகை I நீரிழிவினால் பாதிக்கப்படுவோரில் சதையினால் (Pancreas) சுரக்கப்படும் இன்சுலின் அளவு பற்றாக்குறையாக காணப்படுகின்றது. இவர்களில் நோயின் அறிகுறிகள் தீடிரென ஏற்படும். இது பொதுவாக இளவயதினரிடையே ஆரம்பிக்கும்.


வகை II நீரிழிவினால் பாதிக்கப்படுவோரில் இன்சுலின் சுரப்பதில் குறைபாடு காணப்படாது. ஆனால் இன்சுலின் தொழிற்பாட்டில் பாதிப்பு காணப்படும். இவர்களில் அறிகுறி இலகுவாக வெளிக்காட்டப்பட மாட்டாது. இது வயது வந்தவர்களிலும், உடற்பருமன் கூடியவர்களிலும் ஏற்படும்.

இந்நோயின் பொதுவான அறிகுறிகளாக அதிகளவு சிறுநீர் வெளியேறல், அடிக்கடி தாகம் எடுத்தல், அதிக களைப்பு, சோர்வு, திடீர் நிறைக்குறைவு, அதிக பசி, அடிக்கடி தோலில் தொற்றுக்கள் ஏற்படல் என்பனவாகும். எனினும் மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் சலரோக நோய்க்கு மாத்திரம் உரிய அறிகுறிகள் அல்ல. மேலும் நீரிழிவு நோயானது ஏற்படின் அதனை முற்றாகக் குணப்படுத்துவது கடினம். ஆனால் அதனைக் கட்டுபாட்டில் வைத்திருப்பதன் மூலம் அதன் பாதிப்புகளில் இருந்து எம்மைப் பாதுகாக்க முடியும்.




நீரிழிவு நோயானது ஒருவருக்கு ஏற்படாமல் தடுக்க பின்வரும் முறைகளை பின்பற்றுதல் அனுகூலமானது.

a. உடல் நிறையை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.



b. உணவுப் பழக்கத்தில் பின்வரும் முறைகளை பின்பற்றுதல்

1) காபோவைதரேற்று அதிகம் உள்ள உணவை அடிக்கடி உண்பதைத் தவிர்த்தல்.

2) நார்த்தன்மையான உணவுகளை அதிகம் உண்ணுதல்.

3) தானிய உணவுகளை உண்பதை எமது உணவுப் பழக்கமாக மாற்றுதல்.

4) கொழுப்புச்சத்துக் கூடிய உணவுகளை உண்பதைத் தவிர்த்தல்.

c. புகைத்தலை முற்றாகக் கைவிடல்.

d. மதுபானப் பாவனையை கைவிடல்.

e. தினமும் உடற்பயிற்சி செய்தல்.

f. சிறுவர்களில் ஏற்படும் போசாக்கின்மையை முற்றாகத்தடுத்தல்.

g. மன அழுத்தத்தை குறைத்தல் அல்லது ஆதரவான சமூக வலையமைப்பைப் பேணுதல்.



**காணத்தவறாதீர்கள்!**

**ஓர் அரிய வாய்ப்பு....**

**நீரிழிவு நோய் என்றால் என்ன...?**
**அதன் குணங்குறிகள், அதனை எவ்வாறு கண்டறிவது...?**
**நீரிழிவு நோய் வராது எவ்வாறு தடுக்க முடியும்...?**
**அனைத்து வினாக்களுக்கும் விடை காண...**

**உங்கள் நிறை, உயரம், அறிந்து கொள்ள உடற்பருமனை குறைக்கும் சகல விதமான உடற்பயிற்சி முறைகளையும் அறிந்து கொள்ள கர்ப்பிணித்தாய்மாரே உங்கள் கர்ப்பகாலத்தில் நீரிழிவு நோய் ஏற்படாமல் பாதுகாக்க,**

**உங்கள் குழந்தைகளை சிறுபராயத்திலிருந்து நீரிழிவு நோயிலிருந்து பாதுகாக்க**
**இன்னும் பல சுவாராஸ்யமான விடயங்களுடன்**

**மாபெரும் கண்காட்சி விழா**

**காலம்:-21.02.2010 -27.02.2010**
**இடம்:- யாழ். மருத்துவபீடம்.**

**இக்கட்டுரையானது நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ். போதனா வைத்திய சாலைகளினால் இடம்பெறும் 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' கண்காட்சியை முன்னிறுத்தி பிரசுரிக்கப்படுகின்றது.**

# அனுராதபுரக் குளத்தில் மூழ்கி கடற்படை அதிகாரி மரணம்

(கொழும்பு)

அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள குளம் ஒன்றில் மூழ்கி இலங்கையின் கடற்படை அதிகாரி ஒருவர் மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள நாச்சடுவம் குளத்தில் நீச்சலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை குறித்த லெப்.கொமாண்டர் தரக் கடற்படை அதிகாரியே இவ்வாறு குளத்தில் மூழ்கி மரணமாகியுள்ளார்.

இவர் நீச்சலில் ஈடுபட்டிருந்தபோது குளக்கரையில் இவரது நண்பரான ஜக்சன் அன்ரனி என்ற சிங்கள நடிகரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மலோக தேரரும் உடனிருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (6)

# இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான தனியான பாடசாலை திறந்து வைப்பு

(கொழும்பு)

வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள குடும்பத்தவர்களின் பிள்ளைகளுக்கென புதிய பாடசாலையொன்று நேற்று முன்தினம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மகாமினி வித்தியாலயத்தில் இது தொடர்பில் நடைபெற்ற வைபவத்தில் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். இங்கு அவர் உரையாற்றுகையில்,

பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக கல்வியை இழந்த வடபகுதி சிறுவர்களுக்கு தெற்கில் வாழும் சிறுவர்களைப் போன்று சுதந்திர கல்வியை வழங்கும் ஜனாதிபதியின் திட்டத்துக்கு அமைய இப் புதிய பாடசாலை திறந்து வைக்கப்படுகின்றது.

மீள் குடியேற்றக் கிரமங்களில் இவ்வாறான பல பாடசாலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கல்வியமைச்சும் பிராந்திய கல்விக் காரியமும் இதற்காக ஒத்துழைப்பை வழங்குகின்றன.

வவுனியா காமினி வித்தியாலயத்தில் மேலும் 2ஆயிரத்து 600 மாணவர்களுக்கு கல்வி போதிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்கள், விளையாட்டு உபகரணங்கள், பாடசாலைத் தளபாடங்கள் என்பனவற்றை வழங்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (6)

# எதிர்க்கட்சிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்

## அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமென அமெரிக்கா இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அமெரிக்கா அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

மேலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களின் மனித உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென தெரிவித்துள்ள அமெரிக்கா பொது மக்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடக் கூடிய பின்னணியை எற்படுத்துதல் ஜனநாயகத்தின் முக்கிய குணாதியங்களில் ஒன்று என குறிப்பட்டுள்ளது. (6)

# வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகை 31.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளது

(கொழும்பு)

இலங்கைக்கு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வருகை இவ்வருடத்தில் 31.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக உல்லாசப் பயணிகள் சபை அறிவித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரியில் இலங்கைக்கு 38ஆயிரத்து 468 உல்லாசப் பிரயாணிகள் வருகை தந்தனர்.

இவ்வருடம் அதாவது 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இத்தொகை 50 ஆயிரத்து 757 ஆக அதிகரித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து இம்முறை பெருந்தொகையான உல்லாசப் பிரயாணிகள் வந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன,

கடந்த வருடத்தைவிட இவ்வருடம் பிரித்தானியாவிலிருந்து வந்துள்ள உல்லாசப் பயணிகளின் தொகை 24.6 வீதத்தினாலும் பிரான்சிலிருந்து வந்தோர் தொகை 25.9 வீதத்தினாலும் ஜேர்மனி யிலிருந்து வந்தோர் தொகை 54.1 வீதத் தினாலும் அதிகரித்துள்ளதாக உல்லாசப் பயணிகள் சபை மேலும் அறிவித்துள்ளது. (6)

# ஈழத்து இலக்கியமும் வரலாறும்

10

## கோணேசர் கல்வெட்டு சில ஆராய்ச்சிக்குறிப்புகள்

கனகசுந்தரப் பெருமாள் என்னும் பட்டமும் ஆலயத்தில் முன்னீடும் கோயிற் கணக்குகளைப் பற்றிய பொறுப்பும் கட்டுக்குளம் பற்று வன்னிபத்தின் உரிமைகளாய் இருந்தன என்பது கோணேசர் கல்வெட்டிலுள்ள மேல்வரும் பகுதியினால் அறியப்படுகின்றது.

*இவை முதலான கோயிற் காரியங்களுள்ள பத்ததிக் கணக்கும் குளக்கோட்டு மகாராசா வளமைப் பத்ததியும் பெரிய கணக்கும் கல்வெட்டுக் கோயிற்றொழும்புக் கதைவரலாறும் கோயிலுக்கு முன்னீடும் கட்டுக்குளப் பற்றும் நிலாவெளி நிந்தவூருமாக அந்தக் காலம் அடியேன் குடியிலுள்ளவர்களுக்குக் கிடைத்தபடியால் ... அந்தக் காலம் முன்னோர்கள் எழுதி வைத்த பத்ததிப் படிக்குச் சொன்னதென்று கனகசுந்தரப் பெருமாள் சொன்ன வசனம்.*

கட்டுக்குளம் பற்று வன்னியர் காராளர் குளத்தவர். கல்வெட்டிற் காராளரைப் பற்றியுள்ள மேல்வரம் வர்ணனை மெய்க்கீர்த்தி வடிவில் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

*வடக்கு நாடன் திருநெல்வேலிக் கதிபதி*
*செங்குவளை தாரான் சென்நென் முடியினன்*
*அரசரோடெதிர்த்து வாதுவென்றவன்*
*ஏருடன் மேழி இலங்கும் பதாகையன்*
*அன்னக்கொடியும் ஆவின் பெருக்கமும்*
*செந்நெற்குவியலுந் திரவியக் குப்பையும்*
*நவமணிக் குவியலும் நாடொறுமிருக்க*
*மூவருக்கெளியான் மூவரைக் காப்பவன்*
*அன்னவன்மேன்மை அளவிடற்கரிதாம்.*

வன்னியர் குலமொன்றின் சிறப்பினை மெய்க்கீர்த்தி வடிவிலமைத்துக் கூறும் இது போன்ற வர்ணனை எதுவும் வேறெந்த நூலிலுங் காணப்படவில்லை. கட்டுக்குளம்பற்று வன்னிபங்களைப் பொறுத்தவரையிற் பரம்பரை உரிமைகள் மருமக்கள் தாயமுறையில் உள்ளவை என்று கூறப்பட்டுள்ளமையும் ஆதாரபூர்வமானது; அவதானிக்கப்பட வேண்டியது.

**கொட்டியாரம்பற்று வன்னிபம்**

கொட்டியாரம்பற்றிலே பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்த வன்னிபங்களைப் பற்றிப் பல்வேறு மூலங்களிலிருந்து அறிய முடிகின்றது. வெருகற் சித்திரவேலாயுத சுவாமி கோயிலிலுள்ள சாசனமொன்று கயில வன்னியனார் என்னுமொருவரைக் குறிப்பிடுகின்றது. இச்சாசனத்திலே காலம் பற்றிய குறிப்பெதுவும் இடம்பெறவில்லை. எனினும் அதிலுள்ள எழுத்துக்களின் வரி வடிவ அமைப்பின் அடிப்படையிற் சாசனம் பதினாறாம் நூற்றாண்டிலே எழுதப்பெற்றதென்று கருதலாம். அச்சாசனம் மேல் வருமாறுள்ளது.

*ஸ்ரீசுப்ரமண்ய நம தெற்குமதில் கயில வன்னியனார் உபயம்:(ம) திமராசா மகன் பழையிற் சிதம்பரப்பிள்ளை மேற்குப் பிறமதில் மட்டக்கழப்பூரவர் நிகொம்புக்கரையூரவர் வடபுறம் செட்டியள் உபயம்.*

சித்திரவேலாயுத சுவாமி கோயிற்றிருப்பணிகள் நடைபெற்றபொழுது அதன் தெற்கு மதில் கயிலாய வன்னியனார் என்பவரினாற் கட்டப்பெற்றது என்பதை இச்சாசனம் வாயிலாக அறிய முடிகின்றது.

கயிலாய வன்னிபம் என வழங்கிய மூவரைப் பற்றிக்கோணேசர் கல்வெட்டின் மூலம் அறிய முடிகின்றது. காரைநகரால் வந்த வுன்னிபங்களைப் பற்றிய பட்டியலிற் காணப்படும் பெயர்களில் நான்காவதாக வரும் பெயர் கயிலாய் வன்னிபம் என்பதாகும்.

சோழநாட்டு வன்னிபங்களின் வம்சத்திலுள்ளவர்களிற் பதின்மூன்றா வது பெயராக வருவது கயிலாயசிங்க வன்னிபம். மருங்கூர் மரபிலுள்ள வன்னிபங்களின் பெயர்களிற் பதினான்காவது இடத்திலுள்ளது. கயிலாய குமாரசிங்க வன்னிபம் என்பதாகும்.

வெருகற் கல்வெட்டுக் குறிப்பிடும் கயிலாய வன்னியனார் இம்மூவருள் ஒருவனென்றும் அவனுடைய ஆட்சி கொட்டியாரம்பற்றில் அமைந்திருந்ததென்றுங் கொள்ளலாம்.

பதினேழாம் நூற்றாண்டிற் போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் எழுதப்பட்ட நூல்களிலே இலங்கையிலுள்ள இராச்சியங்கள் சிற்றரசுகள் என்பவற்றுட் திருகோணமலை கொட்டியாரம் என்பனவும் குறிப்பிடப்படுகின்றன.

பதினாறாம் நூற்றாண் டின் முடிவிலே கொட்டியாரம்பற்று வன்னி மையிற் கண்டியரசர்களில் மேலாதிக்கம் ஏற்பட்டிருந்தது.

கண்டியில் அரசுரிமை குறித்து ஜெயவீர பண்டாரனுக்கும் விமலதர்மனுக் குமிடையில் போர் ஏற்பட்டபொழுது, ஜெயவீரனுக்கு ஆதரவாக கொட்டியாரம்பற்று வன்னிபம் 7980 போர் வீரர்களையும், 600 கூலியாட்களையும்,1000 பொதிமாடுகளையும், 30 போர் யானைகளையும், 25 அலியன் யானைகளையும் அனுப்பியிருந்தான் என்று சொல்லப்படுகிறது.

கண்டியரசன் கி.பி 1611ஆம் ஆண் டிலே போர்த்துக்கேயருக்கு எதிரான போராயத்தங்களை மேற்கொண்ட பொழுது, அதனையுற்று இராசப்பிரதானி கள் சபையின் கூட்டமொன்றைக் கூட்டினான். அதிலே கொட்டியாரம்பற்று அதிபனாகிய "இடலி" பழு காமத்துச் செல்ல பண்டாரம், மட்டக்களப்பு குமார பண்டாரம் கோரதீவுக் கதிபனாகிய சண்முக சங்கரி முதலான வன்னிபங்களும் பிரசன் னமாயிருந்தனர். அடுத்த வருசமாகிய 1612இல் கொட்டியாரத்து வன்னியன் கண்டி அரசனுக்கு எதிராக கிளர்ச்சி ஏற்படுத்துவதற்கான சூழ்ச்சியில் பங்குகொண்டிருந்தான் என்று அவன் மீது குற்றச்சாட்டு ஏற்பட்டது. அவனால் கண்டிக்குச் சென்று அரசனிடம் சமுகமளிக்குமாறு அவனுக்கு அரச கட்டளை கிடைத்தது. இடலி நோய் வாய்ப்பட்டிருந்ததாலே தன்னை அழைத்தமைக்கான காரணங்களை அறிவதற்கு தன் மருமகனை இராசதானிக்கு அனுப்பிவைத் தான். கொட்டியாரத்து வன்னிபம் அவனுடைய விசுவாசத்தை மீண்டும் பெற்றுக்கொண் டான்.

1613 ஆம் ஆண்டிலே அரசன் நோயுற்றிருந்தான். இறக்க நேரிடும் என்ற எண்ணத்தினாலே தனது வாரிசாக இளவரசனை நியமிப்பதற்கும் அரச பரிபாலனத்தை நடாத்துவதற்கு ஒரு குழுவினை நியமிப்பதற்கும் இராசப்பிரதானிகள் சபையினைக் கூட்டினான். அச் சபையின் முடிவுகளை தெரிவிப்பதற்கென இளவரசனை அழைத்து வரும் பொறுப்பினை கொட்டியாரத்து வன்னிபத்திடம் அரசன் ஒப்படைத்தான்.

இரண்டாம் இராஜசிங்கனின் காலத்தில் இளஞ்சிங்கம் என்பவன் கொட்டியாரம்பற்று வன்னிபமாக விளங்கினான் என்பதை வீரக்கோன் முதலியார் பாடிய சித்திரவேலாயுதர் காதல் மூலம் அறியமுடிகின்றது.

இப்பனுவலில் மேல்வரும் பாடல்கள் உள்ளன.

*துன்னு மிருமரபுந் துய்யவிளஞ் சிங்கமெனும்*
*வன்னிமை பொற்பாதம் வணங்கையீனி சொல்லாதை*
*வன்னிமை தேசத்தார் மகாநாடு தான்கூடி*
*மின்னுமெழில்மண்டபத்தில் வீற்றிருக்கும் வேளை யிலே*
*கோதில் புகழ்சேர் வீரக்கோன் முதலி தானியற்றுங்*
*காதலராங் கேற்றுகையிற் காதறனைச் சொல்லாதை*

பேராசிரியர்
சி.பத்மநாதன்

இளஞ்சிங்க வன்னிபத்தின் தலைமையிலே, சித்திரவேலாயுத சுவாமி கோயில் மண்டபத்திலே, தேசத்தவர் கூடியிருந்த மகாநாட்டிலே, வீரக்கோன் முதலி பாடிய பிரபந்தம் அரங்கேற்றங் கண்டது என்பது இவற்றாலே தெளி வாகின்றது.

(தொடரும்)

# பொதுத்தேர்தலில் வாக்குகளை எண்ணும் பணிகளில் 70 ஆயிரம் அதிகாரிகளை ஈடுபடுத்த திட்டம்

## தேர்தல்கள் செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்குகளை எண்ணுவதற்காக 70 ஆயிரம் அதிகாரிகளைப் பயன்படுத்தியுள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் வாக்கு எண்ணப் பயன்படுத்தப்பட்ட அதிகாரிகளுடன் ஒப்பிடும் போது இது இரண்டு மடங்கு அதிகரிப்பு என செயலகத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் 35 ஆயிரம் அதிகாரிகள் வாக்கு எண்ணும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பொதுத் தேர்தலில் விருப்பு வாக்குகளை கட்டாயம் எண்ணவேண்டும் என்பதால் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் தேவை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, வாக்கு எண்ணும் நிலையங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படவுள்ளது. இதனிடையே பொதுத் தேர்தல் நிறைவடையும் வரை அரச நிறுவனங்களில் பணியாற்றுவோருக்கு இடமாற்றம், பதவி உயர்வுகள் மற்றும் பணியில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு சுற்றுநிரூபம் மூலம் அறிவித்துள்ளார். (6)

# நாட்டின் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது

## அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிப்பு

நாட்டின் ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் களனி பல்கலைக்கழகத்திற்கு முன்னால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட எதிர்ப்பு போராட்டத்தின் போது இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சிக்கு எதிரான கருத்துக்களை வெளியிடும் தரப்பினருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படுவதாக மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுவோருக்கு இரண்டு சந்தர்ப்பங்களே கரணப்படுவதாகவும் ஒன்று உயிரிழத்தல் மற்றையது கைதாகுதல் எனவும் மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்வரும் வாரத்தில் ருஹுணு, கொழும்பு மற்றும் ஜெயவர்த்தனபுர ஆகிய பல்கலைக்கழகங்களுக்கு அருகாமையில் எதிர்ப்பு போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரசியல் தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு கைது செய்யப்பட்ட மற்றும் கடத்தப்பட்ட மாணவர்கள் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

# கடந்த ஆண்டில் உலகம் முழுவதும் 70 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்

## ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பு

(கொழும்பு)

கடந்த 2009 ஆம் ஆண்டில் சுமார் 70 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் பேரவை (சி.பி.ஜே) அறிவித்துள்ளது.

அண்மைக்காலத்தில் பதிவான மிக மோசமான ஊடகவியலாளர் படுகொலைச் சம்பவங்கள் கடந்த வருடத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

150 ஊடகவியலாளர்கள் தற்போது சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இதில் 60 பேர் ஈரானில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இணைய ஊடகவியலாளர்கள் அதிகளவில் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுவதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

2009 ஆம் ஆண்டில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் இணைய ஊடகவியலாளர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.


சீனாவில் அதிக எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த பத்து வருடங்களாகவே இதே நிலை தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈரான், கியூபா, எரித்திரியா மற்றும் பர்மா போன்ற நாடுகளிலும் ஊடகவியலாளர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

ஊடக அடக்கு முறைகளுக்கு எதிராக சரியான முறையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என சி.பி.ஜே. விசனம் வெளியிட்டுள்ளது. ஊடகங்கள் மீது உலகளாவிய ரீதியில் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது இன்றியமையாததென தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# பி.டி.எப்.பைல் தரும் புரோகிராம்கள்

டொகுமெண்ட் போர்மட்களில் பயன்பாட்டில் நமக்கு அதிகம் உதவும் பி.டி.எப் (PDF Portable Document Format) போர்மட் ஆகும். இதனை உருவாக்க அடோப் சொப்ட் வேயர் ஒன்று விற்பனை செய்யப்படுகிறது. பி.டி.எப் டொகுமெண்ட்களைப் படிக்க அடோப் ரீடர் இலவசமாய் இணையத்தில் கிடைக்கிறது. பைல்களை (எக்ஸெல் வேர்ட், பி.பி.டி போன்றவற்றை பி.டி.எப் பைலாக மாற்ற




வேண்டிய அப்ளிகேஷன் புரோகிராம் கட்டணம் செலுத்தித்தான் பெற வேண்டும்.

ஆனால் அதே நேரத்தில் பி.டி.எப் பைல்களை உருவாக்கவும் உருவாக்கிய பைல்களைப் பிரித்து வைக்கவும் பகுதி பகுதியாக அவற்றை அமைக்கவும் ஒன்றுக்கு மேற்பட்ட பி.டி.எப் பைல்களை இணைக்கவும் இணையத்தில் பல புரோகிராம் கிடைக்கின்றன. அவற்றை இங்கு பார்க்கலாம்.

**பி.டி.எப் மேக்கர் ( PDF Maker from Http://www.pdmaker .biz)**

ஒரே கீ கிளிக்கில் பி.டி.எப் பைலாக மாற்றும் திறன் கொண்டது இந்த சொப்ட் வேயர். எந்த டெக்ஸ்ட் எடிட்டரிலும் டொகுமெண்ட் ஒன்றை தயாரித்துவிட்டு இந்த தளம் சென்று டவுண்லோட் பட்டனில் கிளிக் செய்தால் உங்கள் கணனி லோக்கல் டிரைவில் இறுதி பி.டி.எப் டொகுமெண்ட் கிடைக்கும். எந்த பைல் வகையாக இருந்தாலும் பி.டி.எப். டொகுமெண்ட்டை இந்த தளம் தரும்.

அத்துடன் இதற்கு பாஸ்வேர்ட் கொடுத்து பாதுகாக்கலாம். புதிய டெக்ஸ்ட்டை இணைக்கலாம். பி.டி.எப் ஆன பின்னும் டெக்ஸ்ட்டில் அடிக்கோடிடலாம்.

போல்ட் செய்திடலாம். புதிய படங்களைச் சேர்க்கலாம். ஏற்கனவே இருக்கிற கிராபிக்ஸ் ஒப்ஜெக்டை நீக்கலாம். பி.டி.எப் ஆன பக்கங்களை சுருக்கலாம். நகர்த்தலாம். ஒன்றுடன் ஒன்றை இணைக்கலாம். என்கிரிப்ட் மற்றும் டி கிரிப்ட் செய்திடலாம்.

பி.டி.எப் வேர்ட் ( PDF2 Word from Http://www.pdfonline.com/pdf2 Word index.asp) எந்த விதமான சிக்கலுமின்றி பி.டி.எப் போர்மட்டில் உள்ள பைலை மீண்டும் வேர்ட்டொகுமெண்ட்டாக மாற்றலாம். எந்த புரோகிராமனையும் டவுண்லோட் செய்து இன்ஸ்ரோல் செய்திட வேண்டியதில்லை. இந்த தளம் சென்று உங்கள் கணனியில் பிரவுஸ் செய்து பி.டி.எப் பைலைத் தேர்ந்தெடுத்து அப்லோட் செய்தால் அது வேர்ட் பைலாக மாற்றம் செய்யப்பட்டு உங்களுக்குக் கிடைக்கும்.

இது போல மேலும் ஆறு புரோகிராம்களைப் பயன்படுத்திப் பார்த்ததில் இதுதான் மிகச் சிறந்ததாகவும், வேகமாகவும் செயல்படும் புரோகிராமாகத் தெரிகிறது. பி.டி.எப் பைல்களை வேர்ட்டொக்குமெண்டுக்கு மாற்றம் செய்து பின் அவற்றை எடிட் செய்து பின் மீண்டும் பி.டி.எப். ஆக மாற்றம் செய்திட விரும்புவோருக்கு இது மிகவும் பயன்படும்.

**பி.டி.எப் கிராக் ( PDF Crack)**

நீங்கள் ஒரு பி.டி.எப் பைலை பாஸ்வேர்டுடன் உருவாக்கிய பின் பாஸ்வேர்டை மறந்துவிட்டீர்கள். கவலையே வேண்டாம். **Http:www.ensode.net/pdfcrack,jsf** என்ற முகவரியில் உள்ள தளம் செல்லுங்கள். அங்கு **Browse** என்ற பீல்டில கிளிக் செய்து உங்கள் பைல் எங்கு உள்ளது என்று காட்டவும். உடன் அது திறக்கப்படும். அது மட்டுமின்றி பி.டி.எப்.பைலை உருவாக்கியவர் இதில் காட்டிய வரையறைகள் எதுவும் இல்லாமல் அந்த பைல் புதிய பிரவுசர் விண்டோவில் காட்டப்படும்.

**பி.டி. எப். எக்ஸெல் அன்லைன் (PDFtoExcelonline)**

எக்ஸெல் ஓர்க்ஷீட்கள் பி.டி.எப். போர்மட்டில் கிடைத்தால் அதனை மீண்டும் எக்ஸெல் ஓர்க் ஷீட்டாக மாற்ற ( **Http://www. PDFtoExcelonline.com** ) என்ற முகவரியை அணுகவும், எக்ஸெல் பைல் உங்களுக்கு இமெயில் வழியே அனுப்பப்படும்.

**பி.டி. பைண்ட் (PDFind )**

கூகுள் மற்றும் பிங் போன்ற தளங்கள் வழியே நீங்கள் பைல்களைத் தேடிப் பெறலாம். ஆனால் சில வேளைகளில் நீங்கள் தேடும் சொற்களை பி.டி.எப் பைல்களில் மட்டும் தேடிப் பெற வேண்டியதிருக்கும். இந்த (http:// pdfind.com) தளத்தில் தேடும் சொற்களைக் கொடுத்தால் அவை உள்ள பி.டி.எப் பைல்கள் இருக்கும் இடம் அந்த பைல் எந்த மொழியில் எழுதப்பட்டது என்ற விபரங்களுடன் காட்டப்படும் .

**பி.டி.எப்.வியூ.( PDFVue)**

அடோப் அக்ரோபீட் ரீடர் செய்திடும் உதவியை இந்த தளம் ஒன்லைனில் நமக்குத் தருகிறது. hffp://pdfvue.com என்ற தளத்தில் இது கிடைக்கிறது. உங்கள் டொகுமெண்டை இதில் அப்லோட் செய்து பி.டி. எப் பைலாகவும் மாற்றி எடிட் செய்திடவும் .

**எச் .டி.எம்.எல். பிடிஎப்கொன்வெர்டர் (Html to PDF Converter)**

எந்த ஒரு இணையத்தளத்தினையும் அல்லது எச்.டி.எம்.எல். பைலையும் பி.டி.எப். பைலாக மாற்றித் தரும். செல்ல வேண்டிய தளம் http://htmlpdf converter.com

**மெர்ஜ் பிடிஎப் (Merge PDF)**

எந்த சொப்ட்வெயர் தொகுப்பையும் டவுண்லோட் செய்து இன்ஸ்டோல் செய்திடாமல் அதிக பட்சம் பத்து பி.டி.எப்.பைல்களை இணைக்கலாம். இதனை மேற்கொள்ள நீங்கள் செல்ல வேண்டிய தள முகவரி http://www.mergepdf.net. ஒவ்வொரு பைலும் 5 எம்பிக்கு இருக்க வேண்டும். ஒரு நேரத்தில் 10 பைல்களை இணைக்கலாம். பி.டி.எப்.பைல்களை உங்கள் கணனியில் தேர்ந்தெடுத்து அப்லோட் செய்தால் போதும்.

**கவுண்ட் ஒன் இட் (Count On It)**

பி.டி.எப் டொகுமெண்ட் ஒன்றில் உள்ள கரக்டர்களையும் சொற்களையும் எண்ணி அறிய வேண்டுமா? 1 எம்பி வரை உள்ள பி.டி. எப் பைல்களை இதன் மூலம் பயன்படுத்தி எண்ணிக்கையைப் பெறலாம் http://felixcat.com/ tools/wordcount/ என்ற முகவரியில் உள்ள தளத்தில் இந்த வசதி கிடைக்கிறது. PDF,HTML, XML, CSV போர்மட் பைல்களை மட்டுமே சப்போர்ட் செய்திடும் எம்.எஸ்.ஒபீஸ் பைல்களை பயன்படுத்தாது .

**ஸ்பீடி பி.டி.எப் (Speedy PDF)**

இது ஒரு சிறிய அப்ளிகேஷன். இந்த புரோகிராமினை டவுண்லோட் செய்து இன்ஸ்டோல் செய்து விட்டால் இது ஒரு பிரிண்டராக உங்கள் கணனியில் அமர்ந்துவிடும். நீங்கள் பி.டி. எப் போர்மட்டில் ஒரு பைலை மாற்ற வேண்டும் என்றால் அதனை பிரிண்ட் கட்டளை கொடுத்து கிடைக்கும் டயலொக் பொக்ஸில் பிரிண்டராக ஸ்பீடி பிடிஎப் தேர்ந்தெடுக்க வேண்டும். பைல் பி.டி.எப் பைலாக மாற்றித் தரப்படும். செல்ல வேண்டிய தள முகவரி http://www. brothersoft.com/speedypdf 300 12 html




# கூகுள் லாப்ஸ்-புதிய அம்சங்கள்




*கூகுள் சேர்ச்* தேடல் பகுதிகளில் ஏதேனும் புதுமையான அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, வசதிகள் தரப்பட்டால் உடனே அதனை அறிந்து கொண்டு பயன்படுத்துகிறோம். கூகுள் தன் பிரிவுகள் அனைத்திலும் அதே போல.புதிய அம்சங்களை அறிமுகப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது. கூகுள் லேப்ஸ் பிரிவில் அறிமுகப்படுத்தியுள்ள சில அம்சங்களை இங்கு காண்போம்.

ஜிமெயிலில் செட்டிங்ஸ் **(Settings)** பிரிவில் லேப்ஸ் **(Labs)** என்பதில் கிளிக் செய்தால் இவற்றைப் பார்க்கலாம்.

**Google Search** ஜிமெயிலில் நீங்கள் இருக்கையில், ஏதேனும் ஒன்றை கூகுள் சேர்ச் இஞ்சினில் தேட வேண்டும் என்றால் உடனே வெளியேறி அல்லது அடுத்த டேப்பில் கூகுள் சேர்ச் தளத்திற்குச் செல்ல வேண்டியதில்லை. கூகுள் மெயிலில் இருந்த வாறே தேட வசதி தரப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி வழக்கமான தேடல் இஞ்சினில் உள்ளது. போல டிக்ஷனரி விளக்கம், ஸ்பெல் செக், கல்குலேட்ர், சீதோஷ்ண நிலை அறிதல், செய்திகள் என அனைத்து வசதிகளும் தரப் பட்டுள்ளன.

### Undo Send

இந்த வசதி மூலம், Send பட்டனில் கிளிக் செய்து அனுப்பிய மெயிலை சில நொடிகளில் திரும்பப் பெறலாம்.

### Snake

கூகுள் தளத்தில் இருக்கையில், சிறிய பேர்சனல் பிரேக் எடுக்க வேண்டும் என்றால், விளையாட்டு ஒன்றை விளையாடலாம். Old Snakey என்னும் விளையாட்டினை முதலில் இயக்கிக் கொள்ளுங்கள். பின் ஜிமெயில் செட்டிங்ஸ் சென்று ஷோர்ட் கட் கீ இயக்கத்திற்கு உயிர் **(Enable)** கொடுங்கள். அதன் பின் ஷோர்ட் கட் கீயாக– கீயை அழுத்தினால் பிரபலமான ஸ்நேக் விளையாட்டு கிடைக்கும்.

### Attachment Detector

அட்டாச்மெண்ட் இணைப்பதாக கடிதத்தில் குறிப்பிட்டுவிட்டு பின் அதனை இணைக்காமலேயே மெயிலை நாம் பல முறை அனுப்பி விடுகிறோம். பின்னர் தவறை உணர்ந்து மீண்டும் ஒரு முறை அந்த மெயிலை அட்டாச்மெண்ட் பைலுடன் அனுப்புகிறோம். இந்த தவறைக் கண்டறியும் வசதியாக, அட்டாச்மெண்ட் டிடெக்டர் **(Attachment Detector)** உள்ளது. இதனை இயக்கி விட்டால் அது நாம் தயாரிக்கும் இமெயிலை ஸ்கேன் செய்கிறது. அதில் அட்டாச் செய்வதாக செய்தி இருந்தால் பைல் அட்டாச் செய்யப்படுகிறதா என்று கண் காணித்து இல்லை எனில் நம்மை உஷார் படுத்துகிறது.

### Hide Unread Counts

நமக்கு வந்த பல மெயில்களை நாம் வெகுநாட்கள் திறக்காமல் வைத்திருப்போம். இது தலைப்பில் இத்தனை மெயில்கள் படிக்கப்படாமல் உள்ளன என்று காட்டப்பட்டு நம் மானத்தினை வாங்கும். இந்த செய்தி வராமல் இருக்க இந்த டூல் உதவுகிறது.

### Vacation Time

வெளியூர் செல்கிறீர்களா? அப்படியானால் உங்கள் இன்போக்ஸில் வந்து சேரும் மெயில்களுக்கு யார் பதில் சொல்வது. இங்கு தான் **(Vacation Time)** என்ற வசதி பயன் தருகிறது. இதனை இயக்கி எந்த நாள் முதல் எந்த நாள் வரை என தேதிகளை வரையறை செய்தால், மெயில் வந்தவுடன் அதனை அனுப்பியவருக்கு, நீங்கள் விடுமுறையில் உள்ளதாகவும், குறிப்பிட்ட இந்த நாளில் வருவீர்கள் என்றும் செய்தி மின்னஞ்சலாகத் தானாகச் செல்லும்.

### You Tube Preview


உங்களுக்கு வந்த மின்னஞ்சலில், அதனை அனுப்பியவர் ட்யூப் தளத்தில் உள்ள வீடியோ ஒன்றுக்கு லிங்க் அனுப்பி இருந்தால், அது என்ன என்று அறியாமல் புதியடப்பில் அதனை இயக்க வேண்டியதில்லை. இந்த வசதி மூலம், மெயிலிலேயே அந்த வீடியோவின் பீரிவியூ ஒன்றைக் காணலாம்.

### Insert Image

இந்த வசதி மூலம் இமேஜ் ஒன்றை இமெயிலில் இணைக்கலாம்.

அப்படியே அனுப்பலாம்.

## இந்த வார டவுண்லோட்




கணனியில் மிகவும் கவனமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கையில் திடீரென நமக்கு ஒரு போன் அழைப்பு வரலாம். அவசரமாய் ஏதேனும் தகவல்களை போன் செய்வர் கூறுவார். அப்போது தான் பேனா, பென்சில் மற்றும் பேப்பரைத் தேடுவோம். எதிர் முனையில் இருப்பவர் என்னய்யா இதெல்லாம். பக்கத்தில்வைத்துக்கொள்வதில்லையா என்று அங்கலாய்ப்பார்.

ஏன் கையில் இருக்கும் கணினியில் தகவலைக் குறித்துக் கொள்ள முடியாதா?

முடியும். நோட்ஸ், ஸ்டிக்கி நோட்ஸ், அர்ஜன்ட் நோட்ஸ் என இதனைக் குறிப்பிடுவோம். இது போல நோட்ஸ் குறிப்புகளை, டெஸ்க்டாப்பில் எழுதி வைக்கும் வசதியைத் தர பல புரோகிம்கள் இருந்தாலும் அண்மையில் நான் பார்த்த ஹாட் நோட்ஸ் ( **Hott Notes From http: www.hottnotes.com)** என்னும் புரோகிராம் இவ்வகையில் சிறப்பானதாக இருந்தது.

மெசேஜ், லிஸ்ட், ஸ்கிரிப்பிள் என மூன்று வகைகளில் மூன்று தனி தனிக் கட்டங்களில் நாம் அவசரத் தகவல்களை எழுதி வைக்ககலாம். இந்த கட்டங்களை ஒளி ஊடுறுவம் தன்மை உடையதாய், டெஸ்க் டொப்பில் உள்ளதை மறக்காதவை கையில் இருக்கும். சிறிய அளவில் இதில் படங்களைக் கூட வரைந்து வைக்கலாம். அல்லது படத்தை சேர்த்து வைக்கலாம். வேஸ்ட் பாஸ்கட் என்னும் வசதியில் அதிகம் பயன்படாத குறிப்புகளை எழுதி வைக்கலாம். தேவைப்பட்டால் ரீசைக்கிள் பின்னிலிருந்து எடுத்துக் கொள்வதைப் போல் எடுத்துக் கொள்ளலாம்.

முக்கியமான தகவல்களை பேக்கப் பைலாக வைத்துக் கொள்ளவும் இதனைப் பயன்படுத்தலாம். நினைவில் வைத்துக் கொண்டு வரும் நாட்களில் மேற்கொள்ள வேண்டிய வேலைகளை இதில் ஒரு நினைவூட்டல் போட் மாதிரி ஏழுதி வைத்துக் கொள்ளலாம். இது எங்கும் எடுத்துச் செல்லும் வகையில் போர்ட்பிள் வெர்ஷனாகவும் கிடைக்கிறது. இதனை பிளாஷ் டிரைவில் எடுத்துச் சென்று எந்த தனிப்பட்ட கணணியிலும் பயன்படுத்தலாம்.

# ஈழத்தமிழர்களின் விடிவிற்கு இந்தியா ஒருபோதும் உதவமாட்டாது

இந்தியா இல்லாமல் ஈழத் தமிழர்களுக்கு எதுவுமே கிடைக்கப் போவதில்லை என்பதே எம்மிடையே இப்போதும் வாழும் இந்திய தாசர்களின் கருத்தாக உள்ளது.

இந்தியா ஊடான ஈழத் தமிழர் நலன்கள் என்பது எப்போதுமே சாத்தியமானது அல்ல என்பதை தெற்காசிய அரசியலைப் புரிந்து கொள்பவர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள்.

இந்தியா என்ற பிரமாண்டத்தையும்



அதன் ஈழத் தமிழர்கள் கொண்டிருந்த காதலுமே நடந்து முடிந்த அத்தனை அவலங்களுக்கும் காரணம் என்பதை இந்த இந்திய தாசகர்கள் உணர்ந்து கொள்ள மறுத்தே வருகின்றார்கள்.

பிரமாண்டத்தை மட்டுமே வைத்து பயம் கொள்வதும் அதனை வெல்ல முடியாத சக்தியாக நம்பி வணங்குவதுமான பண்டைய கால மனிதர்களின் எண்ணங்களிலிருந்து நாம் முற்றாக விடுபட வேண்டும். பிரமாண்டங்களை வெல்லும் சக்தி மிக்க மனிதர்கள் வாழும் உலகில் நாமும் வாழ்கின்றோம் என்ற நம்பிக்கை எமக்குள் மாற்றங்களை



ஏற்படுத்தவேண்டும்.

ஆம். தெற்காசியப் பிராந்தியத்தின் வல்லரசாகத் தன்னை நிலைநிறுத்துவதற்காகவே ஈழத்தமிழர்களை அச்சத்திலேயே வைத்திருக்க விழையும் இந்தியாவுக்கும் தனது புஜபல அராஜக கொடூரங்கள் மூலம் மக்களை அச்சுறுத்தித் தன் இருப்பை நிலைநிறுத்த முயலும் பேட்டை ரௌடிக்கும் அதிகம் வேறுபாட்டைக் காண முடியவில்லை.ஆனால் இந்தியாவின் பிரமாண்டத்தை ஈழத் தமிழர்களைத் தவிர இந்தியாவைச் சுற்றியுள்ள எந்த நாடும் எந்த இனமும் அச்சத்துடன் நோக்கவில்லை.

பாகிஸ்தான் இந்தியாவுடன் இரண்டு போர்களை நடாத்தி முடித்துள்ளது. அதனால் இந்தியாவின் பிரமாண்டத்தை முறியடித்து காஷ்மீரின் ஒரு பகுதியைக் கைப்பற்றவும் முடிந்திருக்கின்றது. சீனா இந்தியாவை விடவும் பிரமாண்டமானது. எனவே இந்திய சீன யுத்தத்தில் இந்தியா உரிமை கோரும் பெரும் பகுதியை சீனா தனதாக்கியதை எமது ஆய்வுக்குள் கொண்டுவர முடியாது.

பாகிஸ்தானால் ஏற்படக்கூடிய நீண்டகால ஆபத்தைக் காரணமாகக் கொண்டு இந்தியா வங்களாதேசத்தை உருவாக்கிக் கொடுத்திருந்தாலும் அந்த நாடும் இந்தியாவின் பிரமாண்டத்திற்கு அடி பணியாமலேயே நிமிர்ந்து நிற்கிறது. இந்தியாவின் ஆக்கிரமிப்பிற்குள் சிறைபட்டுக் கிடந்த நேபாளமும் இந்திய எதிர் நிலைப்பாட்டை எடுத்து விட்டது. பூட்டானின் அரசியலில் இந்தியா செல்லாக்காசாகவே உள்ளது. சீனாவின் ஆக்கிரமிப்பிற்குள்ளாக்கப்பட்டுள்ள திபெத் இந்தியாவின் கையாலாகாத்தனத்தின் அடையாளமாகும்.

சீனாவின் செல்வாக்கை அதிகமாகக் கொண்டுள்ள சிங்கள தேசத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் நகர்வுக்குரிய சந்தர்ப்பமாக சிங்கள –தமிழ் முரண்பாட்டைக் கையாண்ட இந்தியா

## சிங்கள எதிரிகளை விட இந்திய துரோகிகள் ஆபத்தானவர்கள்

தன்னை நம்பிய ஈழத் தமிழர்களை சிங்களத்தை குளிர்த்திப்படுத்தும் வேள்விக் கடாக்களாக்கி பெரும் பேரழிவுகளையும் நடாத்தி முடித்துள்ளது. ஆக சிங்கள தேசம் சீனாவின் கையில் முற்றாக விழுந்து விடாமல் தக்கவைப்பதற்கான ஆயுதமாகவே ஈழத் தமிழர்கள் இந்தியாவால் பயன்படுத்தப்பட்டு வருகின்றார்கள். பயன்படுத்தப்பட இருக்கின்றார்கள்.

இந்தியாவைச் சுற்றி உள்ள நாடுகளும் இனங்களும் இந்தியாவைப் புரிந்து கொண்டது போல் ஈழத் தமிழர்களும் இந்தியாவைப் புரிந்து கொண்டு தமது அடுத்த கட்ட நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்தியாவைத் தவிர்ந்துத் விட்டு ஈழத் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கவே முடியாது என்ற கருத்தைத் திணிக்க முயல்பவர்கள் கடந்த காலங்களில் ஈழத் தமிழர்கள் இந்தியாவால் அடைந்த நன்மைகளைப் பட்டியலிட வேண்டும்.

இந்தியா என்ற பிரமாண்டத்தையும் தமிழகம் ஊடான ஈழத் தமிழர்களின் பாசப் பிணைப்பையும் கண்டு சிங்கள மக்கள் மத்தியில் உருவான அச்சமே சிங்கள –தமிழ் இன முரண்பாடாகக் கூர்மையடைந்தது. அந்த இன முரண்பாட்டினூடாகத் தனது பிராந்திய வல்லாதிக்க நலனை அடைய முனைந்த இந்தியாவால் ஈழத் தமிழர்கள் இத்தனை அழிவுக்கும் உள்ளானார்கள். இந்திய சீன பிராந்திய வல்லாதிக்க கபடியாட்டத்தில் சீனாவின் கரம் பற்றி சிங்களவர்கள் தப்பித்துக் கொள்ள ஈழத் தமிழர்கள் இந்தியாவை நம்பிச் சிதையுண்டு போன கதை நீடித்தே செல்கின்றது.

நாங்கள் சோணமிட்ட குதிரைகள் போல் இந்தியா ஊடாகத்தான் எமது நலன்களைப் பேண முடியும் என்ற இந்திய தாசர்களின் கருத்தை முதலில் நாம் முழுதாக நிராகரிக்க வேண்டும். இந்தியா என்ற பிரமாண்டத்தை இலங்கை உட்பட அதைச் சுற்றியுள்ள நாடுகள் எதிர் கொள்வது போலவே நாமும் அதனை எதிர்கொள்ள வேண்டும். இந்தியா ஊடான ஈழத் தமிழர் நலன்கள் என்பது எப்போதுமே சாத்தியமானது அல்ல என்பதை தெற்காசிய அரசியலைப் புரிந்து கொள்பவர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள்.


ஈழத் தமிழர்களைப் பகடைக் காய்களாள நகர்த்தி இலங்கைத் தீவில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்ட இந்தியா முயல்வது போலவே சீனாவைக் கருவியாகக் கொண்டு சிங்கள தேசம் அதனை முறியடிக்கும் சமன்பாட்டைத் தொடரவே போகின்றது. சீனாவின் வேகமான செயல்திறனுக்கும் நகர்வுகளுக்கும் ஈடாக நகர முடியாத இந்தியா குள்ளநரி வேடத்தில் நின்றே காரியமாற்ற முனைகின்றது. இது எப்போதும் ஈழத் தமிழர்களுக்கு சாத்தியமாக அமையப் போவதில்லை.

சிங்கள தேசத்தத்தின் இன அழிப்பு யுத்தத்திற்குத் துணை வழங்கிய இந்தியா, அந்த யுத்த காலத்தில் கொடுமைகளை சர்வதேச அரங்கில் விசாரணைக்குக்கொண்டுவர மேற்குலகம் மேற்கொண்ட முயற்சிகளைக்கூட தனது பரம வைரிகளான சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் இணைந்து தடுத்து நிறுத்திய கொடூரத்தினை ஈழத்தமிழர்கள் என்றுமே மறந்துவிட முடியாது. எனவே ஈழத் தமிழர்கள் தனது அரசியல் இலக்கை வென்றெடுக்க இந்தியாவைத் தாண்டிச் சிந்திக்க வேண்டும்.

ஈழத் தமிழர்களது ஆயுத பலம் சிதைக்கப்பட்ட பின்னர் உருவான வெற்றிடமும் அச்ச நிலையும் அவர்களது அரசியற் பலமான தமிழ்த்தேசிய கூட்டமைப்பை இந்தியாவின் கரங்களுக்குள் புதைத்து விட்டது. சிங்கள தேசத்தை போலவே இந்தியாவின் கைகளுக்கெட்டாத பலமாக புலம்பெயர் தமிழர்களே உள்ளனர். சிங்கள தேசம் போலவே தமது நலனை வென்றெடுக்க இந்தியாவும் புலம்பெயர் தமிழர்களுக்கு வலை விரிக்க ஆரம்பித்து விட்டது.

புலம்பெயர் தமிழர்களை வென்றெடுக்காமல் மேற்கொள்ளப் படும் எந்த நகர்வும் முற்றுப்பெறப் போவதில்லை என்பதை இந்தியாவும் உணர்ந்தே உள்ளது. புலம்பெயர் தேசங்களிலுள்ள இந்திய தாசர்கள் டெல்லிக்கு அழைக்கப்பட்டு மரியாதைப் படுத்தப்படுவதுடன் புலம்பெயர் தேசங்களில் இந்திய பிரமிப்புக்களை ஏற்படுத்தும்படியும் பணிக்கப்பட்டு வருகின்றார்கள். இதற்கான வழங்கல்களும் தாராளமாகவே திறந்து விடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான மேற்குலகின் அழுத்தங்களும்



பொருளாதார ரீதியான தடங்கல்களும் அதிகரித்துச் செல்வது புலம்பெயர் தமிழர்களை மட்டுமல்லாது தமிழீழ மக்களையும் மேற்குலகை நோக்கி நகர்த்திவிடும் என்ற அச்சம் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

தனது பிரமாண்டமான சந்தை வாய்ப்பைப் பயன்படுத்தி மேற்குலகைக் கட்டி வைத்திருந்த இந்தியாவிற்கு ஈழத்தமிழர்கள் மீதான



மேற்குலகின் அனுதாபப் பார்வையைத் தடுத்து நிறுத்த முடியாத அளவிற்கு சிங்கள அரசின் கொடூரங்கள் அதிகரித்தே வருகின்றது.

இதனால் தனது பிராந்திய நலன் சார்ந்த தமிழீழத் தளம் தன்னை விட்டு நிரந்தரமாக விட்டுப் போகாமல் இருப்பதற்காக ஈழத்தமிழர்கள் தலையில் மீண்டும் மிளகாய் அரைக்கும் முயற்சியில் இந்தியா இறங்கியுள்ளது.

புலம் பெயர் தமிழீழ மக்கள் மத்தியில் பிளவுகளை உருவாக்கவும் புதிதான பல ஒட்டுக்குழுக்களைப் பிரசவிக்கவும் புதிய வரதராஜப் பெருமாள்களை புலம்பெயர் தமிழர்களுக்குத் தலைமை ஏற்க வைக்கவும் இந்தியா தொடர் பிரயத்தனங்களை மேற்கொள்ளப் போகின்றது. சிங்கள எதிரிகளை விடவும் இந்தியத்துரோகிகள் ஆபத்தானவர்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

*நன்றி :ஈழநாடு (பாரிஸ்)*



பருத்தித்துறை பிரதேசசபை புலோலி மத்திய நூல் நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற விஞ்ஞான ஏடான ஜீனியஸ் நூல் அறிமுக விழாவில் நூலின் பொறுப்பாசிரியர் என்.பேராசிரியன் உரையாற்றுவதையும், பிரதேசசபைச் செயலாளருக்கு நூலை வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட புற்றளை மகா வித்தியாலயம் மற்றும் புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க 20 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 20 ஆவது ஆண்டுவிழா எதிர்வரும் 21 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.3-0 மணிமுதல் 12.30 மணிவரை திருநெல்வேலி வடக்கு, ஆடியபாதம் வீதி, இல 47/2 இல் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க விடுதியில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி ந. சிவராஜா தலைமையில் நடைபெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கா.சண்முகலிங்கன் மற்றும் திருமதி கௌரி சண்முகலிங்கன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் திரு. திருமதி கலாரஞ்சினி மகேந்திரன், யாழ். இ.எஸ்.பேரம்பலம் அன்கோ உரிமையாளர் திரு. திருமதி இ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகி யோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் பரிசில் வழங்கல் வைபமும் இடம்பெறவுள்ளது. (4-6)

## விருது வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவும் மற்றும் விளையாட்டு அலகும் இணைந்து நடத்தும் விருது வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-4)

## கட்டடத் திறப்பு விழாவும் மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி வதிரி ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லத்தின் புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவும் மலர் வெளியீடும் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு டாக்டர் மா.யோகேஸ்வரதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-4)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு தேவிபாகவதம் என்னும் விடயம் பற்றி சிரேஷ்ட விரிவுரையாளர் சு.குமாரவேல் சொற் பொழிவாற்றவுள்ளார். (4-35)




## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான திட்டமிடல் செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்.வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் குறித்த பாட ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (4-19)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ச.திரவியராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய வித்தியாலய அதிபர் தி.ஆறுமுகம் ஜெகநாதன் கலந்து சிறப்பிப்பதுடன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி செல்வரட்ணம் ஜெகநாதன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (4-19)

✠✠✠

(அல்வாய்)

பருத்தித்துறை சென்தோமஸ் றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் வண. சகோதரி எஸ்.ஜெயநாயகி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து சிறப்பிப்பதுடன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி யமுனாநந்தகுமார் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.(4-10)

✠✠✠

(அல்வாய்)

வல்வெட்டித்துறை வல்வை சிவகுரு வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு தீருவில் இளைஞர் மைதானத்தில் அதிபர் ஆ. சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் செ. உதயகுமார் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக வல்வை ஒன்றியத் தலைவர் மு.தங்கவேல் கலந்துகொள்ளவுள்ளார்.

அத்துடன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி நந்தினி உதயகுமாார் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.(4-19)

✠✠✠

(அல்வாய்)

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் வித்தியாலய அதிபர் திருமதி ஷீலா சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. பாலசுப்பிரமணியம் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (4-19)

✠✠✠

அளவெட்டி அருணாசல வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி வடக்கு பிரதேச செயலர் சு.முரளீதரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக அளவெட்டி கட்டளை அதிகாரி அசித் பிரபா எதிரிசிங்க, அளவெட்டி தெற்கு கிராம அலுவலர் ந.உமாகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

## மருந்தாளர் வெளிவாரி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மருத்துவபீடத்தால் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வரும் மருந்தாளர் வெளிவாரிப் பரீட்சை எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பரீட்சார்த்திகள் அடுத்த மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் 2010 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் போஷகராக இராமன் குணசிங்கம், தலைவராக கிருஷ்ணன் துரைசிங்கம், செயலாளராக சிவஞானம் தனுசன், பொருளாளராக மகேந்திரன் பிரசன்னா, கணக்காய்வாளராக ஞானசேகரம் குருபரன், உபதலைவராக திருநாவுக்கரசு சுதர்சன், உப செயலாளராக சகாயராஜா கிரிகரன் ஆகியோரும் 7 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் கலை கலாசார பண்பாட்டுக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக சனசமூக நிலைய செயலாளர் சி. தனுசன் தெரிவித்துள்ளார். (6-4)

✠✠✠

(வேலணை)

வேலணை கிழக்கு மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாக தெரிவு அண்மையில் வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக ச.வாமதேவன், செயலாளராக மா.இளம்பிறையன், பொருளாளராக இ.விஜயதீபன், உபதலைவராக வி.செல்வம், உபசெயலாளராக க.குணேஸ்வர ஆனந்தன் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக ச.சண்முகலிங்கம், வை. சர்வேஸ்வரன், க.கபிலேஸ்வரன், வ.விஜிதர்சினி, பு.மேகலா, வை.குகனேஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (4-22)

## ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே சைக்கிள் ஓட்டம் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

ஆண்களிற்கான மரதனோட்டப் போட்டியில் முதல் பத்து இடங்களையும் தே. அருள்ராஜ், கு.தயேந்திரன், தே.அஜித் கிறேசியன், சு.கபில்ராஜ், சி.சிவகரன், ச.சசிந்தன், கு.டேவிற், சி.பினேகாஸ், பா.விஜயமோகன், ச.தினேஸ் ஆகியோர் பெற்றுள்ளதுடன் பெண்களிற்கான ஐந்து கிலோமீற்றர் சைக்கிளோட்டப் போட்டியில் முதல் ஐந்து இடங்களையும் ச.ஜனனி, தா.கிஷாந்தி, பி.தினுசியா, வி.பிறின்சிகா, தமயந்தினி ஆகியோர் பெற்றுள்ளனர். (6-14)

## கணனிப்பயிற்சி வகுப்பு ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கனேடியன் செஞ்சிலுவைச் சங்க அனுசரணையுடன் நடாத்தும் கணனிப் பயிற்சி வகுப்பின் ஆரம்ப வைபவம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு காரைநகர் மத்தி அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மேல் மாடியில் நடைபெறவுள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க காரைநகர் பிரிவுத் தலைவர் சோ.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் ஏ.மு.கணேசலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் சு.வு.ஜெயசீலன், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை நிறைவேற்று உத்தியோகத்தர் ச.குகராஜன், கனேடிய செஞ்சிலுவைச் சங்க நிறுவன யாழ். கிளைஅபிவிருத்தி உத்தியோகத்தர் ம.இளங்கோ, கௌரவ விருந்தினர்களாக கிராமசேவையாளர் இ.திருப்புகழூர் சிங்கம் மற்றும் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.இராஜசந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6-14)

# மாசி மாதப் பலன்கள்



## கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3ஆம் பாதங்கள்)*

நட்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நல்லெண்ணம் கொண்ட கும்ப ராசி நேயர்களே!

மாசிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசியிலேயே குரு, சுக்ரன், சூரியன் ஆகியவை சேர்க்கை பெற்றிருக்கின்றன. தனலாபாதிபதி ராசியில் சஞ்சரிப்பது யோகம் தான். தனவரவிற்கு குறைவு ஏற்படாது. ஆனால் ராசிநாதன் சனி வக்ரம் பெற்று அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால் குடும்பச் செலவுகள் கூடும். இனம் புரியாத கவலை மேலோங்கும். எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

மாதத் தொடக்கத்திலேயே சகாய ஸ்தானாதிபதி செவ்வாய் வக்ரம் பெறுகிறார். எனவே, எதிர்பார்ப்புக்களில் இடையூறுகள் ஏற்படும். இருந்தாலும் கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடி விடும். நோய்க்கான அறிகுறிகள் தெரியும் பொழுதே மருத்துவரை அணுகுவது நல்லது. தங்களுக்கோ, தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கோ ஒருவர் மாற்றி ஒருவருக்கு தொல்லைகள் ஏற்படலாம். சேமிப்பில் சிறிது கரையும்.

இது போன்ற நேரங்ளில் வரும் தொகையை சேமிக்காமல் சுப விரயமாக்கிக் கொள்வது நல்லது. தொழில் போட்டிகள் மாறும். உறவினர்களின் பகை மாற புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். இடமாற்றம், வீடு மாற்றங்களை மேற்கொள்ள நினைப்பவர்கள், சுய ஜாதகத்தின் வலிமையைப் பொறுத்து மாற்றம் செய்து கொள்ளலாம்.

உங்கள் ராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியாக விளங்கும் புதன், பெப்ரவரி 19 ஆம் திகதி உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். அந்த நேரத்தில் பிள்ளைகள் வழியில் பெரும் செலவுகள் ஏற்படலாம். பூர்வீகச் சொத்துக்களை விற்கும் சூழ்நிலை உருவாகும். சொத்துப் பரிமாற்றங்களில் பாதியில் நின்ற பணம் வந்து சேரும். வாகனங்களில் செல்லும் பொழுது கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை.

மார்ச் 3ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக

**சிவல்புரி சிங்காரம்**

பெற்றோர் வழியில் ஏற்பட்ட பேச்சுவார்த்தைகள் நல்ல முடிபிற்கு வரும்.

உற்றாரும், மற்றாரும் போற்றும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள். தொழில் போட்டிகளை சமாளிக்கும் ஆற்றல் உருவாகும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். இந்த நேரத்தில் வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்வதா? வேண்டாமா? என்ற சிந்தனை மேலோங்கும்.

உங்கள் ராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியான புதன், 8ஆம் திகதி மீன ராசியில் நீச்சம் பெறப்போகிறார். எனவே, இதுவரை உங்கள் பேச்சைக் கேட்காத பிள்ளைகள், இப்பொழுது கேட்க முன்வருவர். ஆரோக்கியம் சீராகும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும்.

இம் மாதம் குரு வழிபாட்டை மேற்கொண்டு குதூகலத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள்.



## மீனம்

*(பூரட்டாதி 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

எதையும், எப்படிச் செய்தால் வெற்றி பெறலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் மீன ராசி நேயர்களே!

மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, கண்டகச் சனியன் ஆதிக்கத்தால் ஒருபக்கம் கவலைகள் மேலோங்கினாலும், ராசிநாதன் பன்னிரெண்டில் சஞ்சரிப்பதால், மகிழ்ச்சி தரும் வாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கும். ராசிநாதனாகவும், தொழில் ஸ்தானதிபதியாகவும் விளங்கும் குரு, ஆறு, எட்டுக்கு அதிபதிகளோடு இணைந்து சஞ்சரிப்பதால், திடீர் இடமாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரலாம்.

வரும் மாற்றங்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது. ஏனென்றால் சனியின் பார்வை முழுமையாக உங்கள் ராசியில் பதிகிறது. வளர்ச்சி தரும் மாற்றம் என்று நீங்கள் எதிர்பார்த்துச் சென்ற இடம், தளர்ச்சியையும் கொடுக்கலாம். எனவே, அதற்குப் பரிகாரமாக சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

மாதக்கடைசியில் 4,7க்கு அதிபதியான புதன், உங்கள் ராசியிலேயே உலாவரப் போவதால் நீண்ட நாள் ஆசை நிறைவேறும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். வெளிநாட்டில் இருந்து வியக்கும் செய்திகள் வந்து சேரலாம். பழைய வாகனத்தைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனம் வாங்க வேண்டுமென்ற எண்ணம் தலை தூக்கும். வாழ்க்கைத்துணை வழியே மனக்கசப்பு தரும் சம்பவம் ஒன்றைச் சந்திக்க நேரிடலாம். வழிபாட்டரல் வளர்ச்சியை கூட்டிக் கொள்ளலாம்.

பெப்ரவரி 19 ஆம் திக்தி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 4,7க்கு அதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, விரயங்கள் கூடும். மின்சாதனப் பொருட்களை உபயோகப்படுத்தும் பொழுது கவனம் தேவை. குடும்பத்தினர்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு விலை உயர்ந்த ஆடம்பரப் பொருட்களையும், அத்தியாவசியப் பொருட்களையும் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் ஏற்பட்ட மனஸ்தாபம் மறையும்.

மார்ச் 3ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமாதிபதி ராசியில் சஞ்சரிக்கும் பொழுது, எதையும் பெரியவர்களைக் கலந்தாலோசித்துச் செய்வது நல்லது. நம்பிக்கைக்குரியவர்கள் உங்களை விட்டு விலகலாம். பெண்வழிப் பிரச்சினைகளைச் சமாளிக்க பிறரின் உதவி உங்களுக்குத் தேவைப்படும். செல்வாக்கு, கௌரவம் ஆகியவற்றுக்குக் குறைவிருக்காது என்றாலும், இனம் புரியாத கவலை உங்கள் மனதில் இடம் பெற்றுக்கொண்டேயிருக்கும்.

மார்ச் 8ஆம் திகதி கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமான புதன் நீச்சம் பெறுகிறார். எனவே, நினைத்த காரியம் நினைத்தபடியே நடைபெறும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். சொத்துக்களால் இலாபம் உண்டு.

இம் மாதம் சங்கடங்கள் அகல சனீஸ்வரரை வழிபட்டு வருவது நல்லது.

# த.தே.கூட்டமைப்புடன் இணையும் திட்டமில்லை

## ஆனந்த சங்கரி தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தேர்தலில் போட்டியிடும் திட்டம் எதுவுமில்லை என தமிழர் விடுதலைக்கூட்டணி அறிவித்துள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடக் கூடிய சாத்தியம் இல்லை எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு அழைப்பு விடுப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டால் அது வரவேற்கத்தக்கது எனவும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடவுள்ளதாக ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார். (6)

## விபத்துச் சம்பவத்தில் குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார். சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த கே. ஜெயபாலரட்ணம் (வயது-40) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-9)

# சாதாரண தர மாணவர்களுக்கான அழகியல்பாட செய்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரண பரீட்சையில் சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கான செய் முறைப் பரீட்சை இன்று வியாழக்கிழமை கிளி. புனித திரேசா பெண்கள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கிளி. வலய பாடசாலைகளிலிருந்து மேற்படி பாடங்களுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளைத் தவறாது சமூகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் த. குருகுலராசா தெரிவித்துள்ளார்.

(6)


# தேசியப் பட்டியல் மூலம் பிரதமர் உள்ளிட்ட நால்வரை தெரிவு செய்யத் தீர்மானம்

(கொழும்பு)


பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உள்ளிட்ட முக்கியமான நால்வரை தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்வதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளது.

பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்கவுடன் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சரு மான தி.மு. ஜயரட்ன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சருமான அனுருத்த ரத்வத்த ஆகியோரையே தேசியப் பட்டியிலில் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியலில் தெரிவு செய்யவிருக்கின்ற உறுப்பினர்களில் மேற்குறிப்பிட்ட நால்வரின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக முன்னணி தெரிவித்துள்ளது. (6)







வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆரம்ப பிரிவுப் பாடசாலைக்கான விளையாட்டு விழாவில் மாணவர்கள் ஒலிம்பிக் தீபமேற்றுவதையும், மேற்பார்வையாளர் ஏ.டி.அதிசயதாசன் உரையாற்றுவதையும், விருந்தினர் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# பாகிஸ்தான் அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிட விருப்பம்

## முஷாரப் தெரிவிப்பு



மீண்டும் அதிபர் தேர்தலில் போட்டியிட விரும்புகிறேன் என்று பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரப் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானைவிட்டு வெளியேறி கடந்த 10 மாதங்களாக லண்டனில் தஞ்சம் அடைந்துள்ள முஷாரப் கடந்த திங்கட்கிழமை செய்தியாளர்களை சந்தித்த போது இதைத் தெரிவித்தார்.

முஷாரப் பாகிஸ்தானுக்கு திரும்ப விரும்புகிறார் அதைத்தான் சூசகமாகத் தேர்தலில் போட்டியிட விரும்புவதாகத் தெரிவித்துள்ளார் என்று அரசியல் நோக்கர்கள் கூறியுள்ளனர்.

முஷாரப் மேலும் கூறியதாவது; நான் எனது தேசத்தை நேசிக்கிறேன்.என் தேசத்துக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராகவுள்ளேன் .நான் அதிபர் தேர்தலில் மீண்டும் போட்டியிட விரும்புகிறேன். அப்போதே நாடு திரும்ப விரும்புகிறேன். அதிபர் தேர்தலில் யார் போட்டியிட விரும்பினாலும் தங்களை யார் ஆள வேண்டும் என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என்றார்.

1999இல் இராணுவ பதவியில் இருந்த போது ஆட்சியைக் கைப்பற்றியது பற்றி கேட்டதற்கு என்னால் இப்போது எதுவும் செய்ய இயலாது. ஏனென்றால் தற்போது நான் ஒரு சாதாரண குடிமகன் என்றார்.

பாகிஸ்தான் நீதிமன்றங்களில் முஷாரப்புக்கு எதிராக ஏராளமான வழக்குகள் நடந்து வருகின்றன . இதனால் பாகிஸ்தானுக்குத் திரும்பத் தயக்கம் காட்டி வருகிறார். லண்டனில் தங்கியுள்ள முஷாரபுக்கு தீவிரவாதிகள் அச்சுறுத்தல் உள்ளதால் அவருக்கு கடும் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது. (6)

# அமெரிக்காவே சர்வாதிகாரி; ஈரான் குற்றச்சாட்டு


(வோஷிங்டன்)

அமெரிக்கா தான் சர்வாதிகாரியாக இருந்து கொண்டு பிறர் மீது குற்றஞ்சாட்டுவதாக ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரான் ஜனாதிபதி இராணுவ சர்வாதிகாரியாக வருவதாக அமெரிக்க குற்றஞ்சாட்டியிருப்பதற்கே ஈரான் இவ்வாறு பதிலளித்துள்ளது.

ஈராக்கிலும் ஆப்கானிலும் சண்டையிடுவதற்கு அமெரிக்காதான் வெளிநாட்டுக்கு நூற்றுக்கணக்கான படையினரை அனுப்பியது. எனினும் ஈரான் அவ்வாறு செய்யவில்லை என்று ஈரான் ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மட் நிஜாத் கூறியுள்ளார்.


தமது நாட்டின் அணுத் திட்டத்துக்கு எதிரான புதிய தடைகளுக்கான அச்சுறுத்தல்களை நிராகரித்துப் பேசிய அவர் அத்தகைய நகர்வுகளினால் தமது நாடு பாதிக்கப்படாது என்றும் கூறினார். (6)



ஈரான் மீது தடை விதிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்த ரஷ்யா வந்திருந்த இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகூ பிரதமர் விளாடிமிர்புடினை தலைநகர் மொஸ்கோவில் சந்தித்துப் பேசினார்.

# நாடாளுமன்ற இடைத்தேர்தல் வேட்புமனுவை வாபஸ் பெற்றார் நவாஸ்

(லாகூர்)



பாகிஸ்தான் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் போட்டியிட தான் தாக்கல் செய்திருந்த வேட்பு மனுவை கடந்த செவ்வாய்க்கிழமை பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சியின் தலைவர் நவாஸ் ஷரீப் வாபஸ் பெற்றுள்ளார்.

நாடாளுமன்றத்தின் வெளியில் இருந்தே ஆளும் கட்சிக்கு நெருக்குதல் அளிக்க நவாஸ் ஷரீப் முடிவு செய்துள்ளார். இதனால் அவர் இடைத் தேர்தலில் போட்டியிடும் முடிவை மாற்றிக் கொண்டுள்ளார் என்று அவரது கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் நாவஸ் ஷரீப் தேர்தலில் போட்டியிடுவதை எதிர்த்து தேர்தல் விவகார வழக்குகளைக் கையாளும் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அவர் தேர்தலில் போட்டியிடத் தீர்ப்பாயம் எப்படியும் தடைவிதிக்கும். இதை அறிந்த நவாஸ் ஷரீப் வேட்பு மனுவை வாபஸ் பெற்றுள்ளார் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.(6)

# ஹெயிட்டியில் பாடசாலைக் கட்டடம் இடிந்து விழுந்ததில் 4 சிறுவர்கள் பலி

(போர்ட் ஒவ் பிரின்ஸ்)

ஹெயிட்டியில் வட கடற்கரை நகரான கேப்ஹெயிட்டியனிலுள்ள பாடசாலையில் வகுப்பறைக் கட்டடமொன்று இடிந்து விழுந்ததில் 4 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அண்மையில் பெய்த அடைமழை காரணமாக கட்டட சுவர்கள் பலவீனமடைந்திருந்தமையே இந்த அனர்த்தத்துக்கு காரணமென கருதப்படுகிறது.

மூன்றாம் வகுப்பைச் சேர்ந்த 8 வயதுக்கும் 9 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களே மேற்படி வகுப்பறைக் கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஜனவரி 12ஆம் திகதி ஹெயிட்டியை தாக்கிய பாரிய பூமியதிர்ச்சியால் கேப் ஹெயிட்டியின் நகர் நேரடியாக பாதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (6)




# தலிபான் அமைப்பின் முக்கிய தளபதியான அப்துல் கனி பராதர் கராச்சியில் கைது

(வோஷிங்டன்)

தலிபான் அமைப்பின் முக்கிய தளபதி அப்துல் கனி பராதர் பாகிஸ்தானின் கராச்சி நகரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் மீது 2001ஆம் ஆண்டு அமெரிக்கா தாக்குதல் நடத்தி தலிபான் ஆட்சியை வீழ்த்தியது. ஆட்சியை இழந்த தலிபான் தலைவர் முல்லா ஓமர், தளபதி முல்லா அப்துல் கனி பராதர் ஆகியோர் தலைமறைவானார்கள். இவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் அமெரிக்க இராணுவம் ஈடுபட்டு வந்தது.

இதற்கிடையே பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.யும் அமெரிக்க புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏ.வும் இணைந்து செயற்பட்டு கராச்சியில் பதுங்கியிருந்த பராதரை கைது செய்துள்ளதாக அமெரிக்க அதிகாரி தெரிவித்துள்ளார்.

பராதர் கைது செய்யப்பட்டதன் மூலம் தலிபான் தலைவர் முல்லா ஓமர் பதுங்கியுள்ள இடத்தையும் எளிதில் கண்டுபிடித்து விட முடியும் என அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

தலிபான்களை ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்காவுக்கு பராதர் கைதானது மிகப்பெரிய வெற்றியாகக் கருதப்படுகிறது.

ஆனால் பராதர் பிடிபடவில்லை என்றும் ஆப்கானிஸ்தானில் தொடர்ந்து தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும் தலிபான் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள மர்ஜா என்ற இடத்தில் தலிபான்களின் தாக்குதலில் அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர். இந்த தோல்வியை மறைப்பதற்காக அமெரிக்க பராதர் கைது செய்யப்பட்டுவிட்டதாக புரளி கிளப்பிவிட்டுள்ளது என தலிபான் தகவல் தொடர்பாளர் கனி தெரிவித்துள்ளார்.

அல்-கொய்தா தலைவரின் நெருங்கிய கூட்டாளியான பராதர் ஆப்கானிஸ்தானில் குவெட்டா ஷூரா என்ற அமைப்பையும் நடத்தி வந்தார். தலிபான் தலைவர் முல்லா ஓமர் தனது பெரும்பாலான பொறுப்புக்களை பராதரிடம் தான் ஒப்படைத்திருந்தார்.

எனவே இவரது கைது தலிபான்களுக்கு பெருத்த பின்னடைவை ஏற்படுத்தும் என அமெரிக்கா நம்புகிறது.

கடந்த 11ஆம் திகதியே பராதர் கைது செய்யப்பட்டுவிட்டதாகவும் வெள்ளை மாளிகையின் கோரிக்கையின் பேரில் உடனடியாக இந்த செய்தி வெளியிடப் படவில்லை என்றும் கூறப்படுகிறது. (6)

# ஹெயிட்டி பூகம்ப இடிபாடுகளை அகற்ற மூன்று ஆண்டுகள் ஆகும்

## அந்நாட்டு அதிபர் தெரிவிப்பு

(போர்ட் ஒவ் பிரின்ஸ்)



பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஹெயிட்டி தீவில் மலிந்துள்ள கட்டிட இடிபாடுகளை அகற்ற மூன்று ஆண்டுகள் ஆகும் என அந்நாட்டு அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 12ஆம் திகதி ஹெயிட்டி தீவில் பயங்கர பூகம்பம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோளில் 7 புள்ளிகளுக்கு மேல் பதிவான இந்த பூகம்பத்தால் கட்டிடங்கள் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கி சுமார் 2 இலட்சம் பேர் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இலட்சக்கணக்கானோர் வீடு, உணவு இன்றி தவிக்கின்றனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு உலக நாடுகள் உதவி வருகின்றன.

இதுதவிர அதிபர் மாளிகை, அரச அலுவலகங்கள் மற்றும் பிரபலமான தனியார் கட்டிடங்களும் இடிந்து தரைமாட்டமாகியுள்ளன. தலைநகர் போர்ட் ஒவ் பிரின்ஸில் குவிந்துள்ள கட்டிட இடிபாடுகளை அகற்றும் பணியில் ஆயிரக்கணக்கான டிரக்குகள் ஈடுபட்டுள்ளன.

இதற்கிடையே நில அதிர்வுகள் அப்பகுதியில் தொடர்கதையாக உள்ளன. பூகம்பத்துக்குப் பிறகு இதுவரை 54 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன. மேலும் பலமான பூகம்பம் ஏற்பட வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இதனால் பூகம்பத்தில் தப்பித்த வீடுகளிலும் வசிப்பதற்கு மக்கள் தயங்குகின்றனர். மாடி வீடு உள்ளவர்கள் கூட குடிசைகளை அமைத்து தங்கியுள்ளனர்.

வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது திடீரென நில அதிர்வு ஏற்பட்டதால் அலறியடித்துக் கொண்டு வெளியில் வந்து விட்டோம். பின்னர் வெளியில் குடிசை அமைத்து அதில் தான் தங்கியுள்ளோம். வீட்டுக்குள் போகவே பயமாக உள்ளது என லூயிஸ் லபோன்ட் என்பவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக இடிபாடுகள் அகற்றப்பட்ட இடங்களிலும் புதிய கட்டிடங்களைக் கட்டுவதை தள்ளிப் போட்டுள்ளனர்.

பூகம்பத்தின்போது அதிபர் மாளிகையும் இடிந்து தரைமட்டமானதால் விமான நிலைய காவல் நிலையம் தான் தற்காலிக அதிபர் அலுவலமாக இயங்கி வருகிறது. இது குறித்து அதிபர் ரென் பிரவல் கூறுகையில்;

அடுத்த பூகம்பம் தாக்குமோ என்ற பீதி காரணமாக கொங்கிறீற் கட்டிடத்துக்குள் இரவில் நிம்மதியாக தூங்க முடியாமல் மக்கள் தவிக்கின்றனர். எனக்கும் அந்தப் பயம் உள்ளது. கட்டிட இடிபாடுகளை அகற்றுவதற்கு இன்னும் மூன்று ஆண்டுகள் ஆகும் என்றார். (6)

பிறருக்குப் போதிப்பவன் தன்னை மறந்து விட வேண்டாம்.
- அப்துற்-றஹீம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பௌத்த பிக்குகளின் மாநாடு மானாட மயிலாட நிகழ்வாகிப் போனது

நாட்டின் தற்போதைய அசாதாரண சூழ்நிலை தொடர்பில் ஆராய்வதற்காக பௌத்த தேரர்கள் கூட்டவிருந்த மாநாடு நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பௌத்த நாடு என்ற நினைப்பில் பௌத்த பிக்குகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படுவது இந்த நாட்டின் மரபு.

பௌத்த பீடாதிபதிகளை எதிர்த்து எதுவும் செய்ய முடியாதென்ற நிலைப்பாடு தொடர்வதனால், ஆட்சியாளர்களின் தீர்மானங்கள் பௌத்த பீடங்களில் இருந்தே வெளிப்படுகின்றன என்ற கருத்துக்களும் உள்ளன.

இனப்பிரச்சினை தொடர்பிலும் பௌத்த பீடங்கள் கணிசமான பங்கை ஆற்றியுள்ளன. இனப் படுகொலைகள், இனத்துவேஷம், சிங்கள-தமிழ் மக்களிடையேயான கலவரங்கள் என்ற நீண்ட பட்டோலையின் தயாரிப்பாளர்களாக பௌத்த பிக்குகள் இருந்தனர் என்ற குற்றச்சாட்டுக்களும் நிராகரிக்கப்படக் கூடியவையல்ல.

அதேநேரம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட்ட போதெல்லாம் அதனைத் தடுத்து நிறுத்துவதிலும் பௌத்த பீடங்கள் காத்திரமாகப் பங்காற்றின.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்காக நோர்வே முன்னெடுத்த சமாதான முயற்சியை எதிர்த்து பௌத்த பிக்கு ஒருவர் நடு வீதியில் உண்ணாவிரதம் இருந்த பெருமை இலங்கையில் மட்டுமேயுண்டு.

பிற உயிர்க்குத் தீங்கிழைக்கா பக்குவத்தைப் போதித்த கௌதம புத்தபிரானின் பாதையைப் பின்பற்றும் பௌத்த துறவிகள் எப்படியெல்லாம் நடந்தார்கள் என்பதை இந்த உலகம் அறிகிறதோ! இல்லையோ! போதி மரத்து மாதவன் நிச்சயம் அறிவான்.

சிலரை சில காலம் ஏமாற்றலாம். பலரைப் பல காலம் ஏமாற்றலாம்-ஆனால் எல்லோரையும் எல்லாக் காலங்களிலும் ஏமாற்ற முடியாது என்ற தத்துவம் இலங்கை பௌத்த பிக்குகளுக்குப் பொருந்தத் தலைப்பட்டுள்ளது.

ஆம், நாட்டில் ஏற்பட்டுள்ள குழப்பமான சூழ்நிலை-ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சரத் பொன்சேகா சிறையில் இருக்கும் குழப்ப நிலை-ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை இரத்துச் செய்யும் மனு மன்றேறிய அச்ச நிலை-பொதுத் தேர்தல் குழப்பங்கள் என்ற இன்னோரன்ன விடயங்களை முன்வைத்துப் பௌத்த பீடங்கள் இன்று மாநாடு கூடவிருந்தன.

எனினும் அந்த மாநாட்டைக் கூட்ட முடியாமல் போயிற்று. இது இலங்கை அரசியலில் பௌத்த பீடாதிபதிகளின் சக்தி குறைந்து விட்டதென்பதை நிரூபிப்பதாக அமையும்.

பௌத்த பிக்குகள் பிரிந்தமை, பௌத்த பீடங்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் அவர்களின் மாநாட்டை மானாட மயிலாட என்ற நிலைக்குக் கொண்டு வந்து விட்டது.

இன்னும் போகப் போக பௌத்த பிக்குகள் புத்தபிரான் பெற்ற ஞான நிலையைப் பெறும் வாய்ப்புக் கிட்டும் சந்தர்ப்பம் நிறையவேயுண்டு.

# பொன்சேகாவை விடுவிக்கும் வரை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடரும்

## -ஜே.வி.பி.சூளுரை-

(கொழும்பு)

நாட்டின் தளபதியான ஜெனரல் சரத் பொன்சேகாவை பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கைது செய்து தடுத்து வைத்து சித்திரவதைக்குட்படுத்தாமல் உடனடியாக அவரை விடுதலை செய்யவும், ஜனநாயக ரீதியில் போராட்டங்களை முன்னெடுத்து மக்கள் அலரி மாளிகையை கைப்பற்றுவதற்கு முன்னர் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு பிரதான எதிர்க்கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பி. சூளுரைத்துள்ளது.

ஜெனரல் சரத்பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் கூட்டத்தின் போதே அக்கட்சியின் தலைவர் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு சூளுரைத்தனர்.

மக்கள் விடுதலை முன்னணி நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் குஞ்சி பொரளைச்சந்தியில் நேற்று முன்தினம் மாலை 3 மணிக்கு ஆரம்பமானது. ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கத்திற்கும் ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறுகளுக்கும் எதிரான கோசங்களை எழுப்பியது மட்டுமல்லாது அரசாங்கத்திற்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கும் எதிரான வாசகங்கள் தாங்கிய பதாதைகளையும் கறுப்புக்கொடிகளையும் ஏந்தியிருந்தனர்.

இதில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் லால்காந்த, அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் உரையாற்றினர்.

எதிர்ப்புக்கூட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லால்காந்த உரையாற்றுகையில் ,

இந்த அரசாங்கத்தை மக் கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பொன்சேகா கைது செய் யப்பட வில்லை, கடத்தப்பட்டுள்ளார், அவரை விடுவிக்கும் வரை இந்தப் போராட்டம் தொடரும் மக்கள் விடுதலை முன் னணி போராட்த்தை கை விடாது. அரசாங்கம் ஜனநாயகத்தையும் ஊடக சுதந்திரத்தையும் குழி தோண்டி புதைத்துள்ளது.

நாட்டில் இவ்விரண்டுமே இன்றில்லை. மக்கள் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு முயற்சிக்க வேண்டும். 47 இலட்சம் வாக்குகளை பெற்ற ஜெனரல் சரத்பொன்சேகாவே இந்த நாட்டின் உண்மையான ஜனாதிபதி. கணனியின் மூலம் பெறுபேறுகளை மாற்றியவருக்கு மக்கள் ஆணையை வழங்க்வில்லை. இந்த போராட்டம் இவ்விடத்தில் இன்றுடன் நின்று விடாது. ஜெனரலை விடுக்கும் வரை போராட்டமும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் தொடரும். மக்கள் அலரி மாளிகையைக் கைப்பற்றுவதற்கு முன்னர் ஜெனரல் சரத்பொன்சேகாவை விடுதலை செய்யவும்.

தேர்தலுக்கு ஜனநாயகத்திற்கும் பயம் இல்லை என்றால் ஜெனரலை உடனடியாக விடுதலை செய்யவும். இல்லையேல் ஜனநாயக ரீதியில் போராட்டத்தை முன்னெடுத்து ஜெனரல் சரத்பொன் சேகாவை விடுவிப்போம் என்றார்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க உரையாற்றுகையில்,

ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கு மக்கள் வீதியில் இறங்கியுள்ளனர். இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இங்கு மட்டுமல்லாது முழு உலகிலும் நடத்தப்படுகிறது. ஜன நாயகத்திற்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் மகாநாயக்கதேரர்களும் இந்த விடயத்தில் தலையிடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கும் ஜெனரலை விடுதலை செய்வதற்குமான மக்கள் போராட்டம் அவரை விடுவிக்கும் வரையில் தொடரும் என்றார். (6)

# விபரங்களை சமர்ப்பிக்கவும்

(அல்வாய்)

யாழ். மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயங்களிலும் இது வரை கிடைக்கப்பெற்ற 2010இற்கான இலவசபாட நூல், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி என்பனவற்றின் விபரங்களை தனித்தனியே தரம், பாடம், பெற்றதொகை, பற்றாக்குறை என்ற அடிப்படையில் கோட்ட ரீதியாக பூரணப்படுத்தி எதிர் வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா பணித்துள்ளார். (4-19)

# பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 7 இலட்சத்து 21 ஆயிரத்து 359 பேர் தகுதி

(கொழும்பு)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நடைபெற விருக்கும் 7ஆவது பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 9 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களை தெரிவு செய்வதற்கு இம் மாவட்டத்தில் உள்ள 11 தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்த 7 இலட்சத்து 21 ஆயிரத்து 359 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியிலிருந்து 53,111 பேரும் , வட் டுக்கோட்டை தேர்தல் தொகுதியிலிருந்து 63,991 பேரும், காங் கேசன் துறைத் தேர்தல் தொகுதியிலிருந்து 69, 082 பேரும் ,மானிப்பாய் தேர்தல் தொகுதியிலிருந்து 71,114 பேரும்,கோப்பாய் தேர்தல் தொகுதியிலிருந்து 65,798 பேரும், உடுப்பிட்டி தேர்தல் தொகுதியிலிருந்து 56, 426 பேரும், பருத்தித்துறைத் தேர்தல் தொகுதியிலிருந்து 48,613 பேரும், சாவகச்சேரி தேர்தல்தொகுதியிலிருந்து 65,141 பேரும் நல்லூர் தேர்தல் தொகுதியிலிருந்து 72,558பேரும், யாழ்ப் பாணத் தேர்தல் தொகுதியிலிருந்து 64,714 பேரும், கிளிநொச்சி தேர்தல் தொகுதியிலிருந்து 90,811 பேரும் இவ்வாறு வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கடந்த 2004ஆம் ஆண்டு நடைபெற்ற 6ஆவது பாராளுமன்றத் பொதுத்தேர்தலில் இம்மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 257,320வாக்கு களைப்பெற்று 08 ஆசனங்களையும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி) 18,612 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் பெற்றுக்கொண்டன.

இம்மாவட்டத்தில் அன்று பதிவு செய்யப்பட்டிருந்த (644, 279 பேர்) மொத்த வாக்காளர்களில் (305,259பேர்) 47.38 சதவீதமானோர் மாத்திரமே வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# விண்ணப்பம் இல்லாது மீளளிக்கும் இறைவன்-பாபா

மனிதன் இன்று எதற்கு துணிகின்றான். எதற்கு அஞ்சுகின்றான். தீங்கு செய்யத் துணிக்கின்றான். நீதி காக்க அஞ்சுகின்றான். தீமையினால் வரும் இலாபங்கள் படாடோப வாழ்க்கையைத் தருகின்றது என்பதில் உண்மை இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் இந்த இலாபமும் அதனால் கிடைக்கும் சுகபோகத்தின் காலமும் மிகவும் அற்பமானது.பின்பு இதனால் நாம் அனுபவிக்கும் துன்ப துயரங்களின் பெருக்கம் பல்கி பெருகி வட்டிக்கு வட்டியாக வைப்பில் இடப்படும்.

அப்போது இறைவன் பெரும் நோக்கராகவும் பகிர்ந்தளிப்பவராகவும் இருந்து நாம் என்ன மூலதனத்தை வைப்பிலிட்டோமோ அதனை விண்ணப்பம் செய்யாமலேயே அதனை எங்களுக்கு மீளளிப்பார் .அந்த தருணங்களில் வேதனை என்பது இரு வழிகளால் தாக்கம் புரியும். வலி ஒரு பக்கம் அதே நேரம் வலிக்கு நிவாரணம் இல்லாது தவிக்கும் தாக்கம் ஒரு பக்கம்.

தவிச்ச முயல் அடிப்பவர், எரிகின்ற வீட்டில் பிடுங்குகின்றவர் ,இறந்தவர் இடுப்பில் என்ன இருக்கின்றது எனத் தேடுப வரும் பெருகிய உலகமாயிற்றே. நல்லவர்கள் என்போர் இம்மியளவேனும் உண்டோ என்று தேடும் காலமாயிற்றே.



தீயவர் நல்லவரையும் தீயவராக்கும் தோற்றம் பெற்றவராவர். தீயவரின் படாடோப வாழ்வு நல்லுள்ளங்களை கேள்வி கேட்க வைக்கின்றது. இறைவா நான் பயணிக்கும் வழிதான் தீய வழியோ? நான் தான் தீயதை நல்லனவாக கருதுகின்றே னோ? எனும் எண்ணாங் களை எழவைக்கின்றது. ஆனால் ஒரு கணம் நிதானமாக உண்ணும் உணவில் உறங்கும் உறக்கத்தில் உழைக்கும் ஊதியத்தில் உவர் பரவா நிலம் போல் ஊறில்லா உடலோடு வாழ்கின் றேனோ இறைவா இது எத்துணை பெரிய செல்வம். இதுவே பதிலாக கிடைக்கும். இறைவா எங்கள் வாழ்வு உன்னை நித் தம் அண்டியதாக அமைய அருள் புரிவீராக .

ஜெய்சாயிராம் :- யாதவன்

# ஈழத் தமிழர்களுக்காக ஒன்றுபட்டு குரல் கொடுப்போம் -கி.வீரமணி



இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமையை நிலைநாட்ட இலங்கை அரசை மத்திய அரசு வலியுறுத்தவேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத் தப்பட்டது.

இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமைய்ய நிலைநாட்ட மத்திய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி சென்னையில் திராவிடர் கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு தலைமையேற்று பேசிய திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழர்களுக்கு வாழ்வுரிமை அளிக்கப்படும் என்று தெரிவித்த ராஜபக்ஷ வெற்றிபெற்ற பின் அதைநிறைவேற்ற தவறிவிட்டார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் தத்துவமே முள்வேலிக்குள் இருக்கும் தமிழர்கள் அவரவர் சொந்த இடங்களுக்கு அனுப்ப வேண்டும். மற்ற மக்களுக்கு என்னென்ன உரிமைகள் இருக்கிறதோ, அதே உரிமைகள் தமிழர்களுக்கும் வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அனைத்துக் கட்சியினரும் வேறுபாடு மறந்து ஒற்றுமையுடன் போராட வேண்டும் என்பதுதான்.

அனைத்துக் கட்சியினரும் ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டும். நாம் அனைவரும் அவர்களுக்கு கைகொடுப்போம். குரல் கொடுப்போம். அந்தக் கோரிக்கைகள் நிறையட்டும். கோடிக்கைகள் உயரட்டும் என்றார். (6)

# பாடகர் ரி.எம்.சௌந்தரராஜன் மருத்துவமனையில் அனுமதி

(சென்னை)

சினிமா பின்னணிப் பாடகர் ரி.எம்.சௌந்தரராஜன் மூளை நரம்பில் பாதிப்பு காரணமாக, சென்னையில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்ப் பட உலகில் பின்னணிப் பாடகர்களில் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர் ரி.எம்.சௌந்தரராஜன். இவருடைய சொந்த ஊர், மதுரை. "கிருஷ்ண விஜயம்" என்ற படத்தின் மூலம் பின்னணிப் பாடகராக அறிமுகம் ஆனார்.

அந்தப் படத்தில் அவர் பாடிய " ராதே என்னை விட்டு போகாதேடீ" என்ற பாடல் பட்டிதொட்டி எங்கும் பிரபலமானதால், முன்னணிப் பாடகராக உயர்ந்தார்.



தொடர்ந்து 64 வருடங்களாக பாடிக் கொண்டிருக்கும் அவருக்கு இப்போது, 87 வயது ஆகிறது. அடுத்த மாதம் 24 ஆம் திகதி 88 வயதைத் தொடுகிறார். எப் போதும் இளை ஞரைப் போல் சுறுசுறுப்பாக செயல்பட்டு வந்த அவருக்கு, சர்க்கரை நோய் இருந்து வந்தது.

கடந்த சில நாட்களாக அவருக்கு ஞாபக சக்தி குறைந்தது. மிகவும் தெரிந்தவர்களைக் கூட அவரால் அடையாளம் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நினைவாற்றல் குறைந்தது.

உடனடியாக சென்னை மந்தவெளியில் உள்ள ஒரு தனியார்வைத்தியசாலையில் அவரை அனுமதித்தார்கள். அவரை பரிசோதித்த டாக்டர், மூளை நரம்பில் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகப்பட்டார்.

அதைத் தொடர்ந்து டி.எம்.சௌந்தரராஜன், சென்னை அப்பலோ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருடைய தலையில் "ஸ்கேன்" எடுக்கப்பட்டது. பின்னர், அங்குள்ள அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். (6)

## ஆந்திராவை பிரிக்க சங்கராச்சாரியார் எதிர்ப்பு

(குண்டூர்)

ஆந்திராவை பிரித்து தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கவேண்டும் எனக் கோரி பல்வேறு போராட்டங்கள் நடந்து வருகின்றன. இந்த நிலையில் ஆந்திரா மாநிலத்தை பிரிப்பது தேவையற்றது என காஞ்சி சங்கராச்சாரியார் கருத்து தெரிவித்துள்ளார்.

காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் 3 நாள் பயணமாக ஆந்திராவிற்கு சென்றுள்ளார். அவர் குண்டூரில் நிருபர்களிடம் கூறியதாவது,

ஆந்திராவை பிரித்தால் விபரீதமாகிவிடும். மாவோயிஸ்டு தீவிரவாதிகள் பலம் பெற்றுவிடுவார்கள். மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களும் தெலுங்கு பேசுகின்றனர்.

அப்படி இருக்க தெலுங்கானா தனி மாநில போராட்டம் தேவையற்றது. நாம் அனைவரும் ஒற்றுமையுடன் இருக்கவேண்டும். அனைவர் மனதிலும் நாம் இந்தியர்கள், இந்துக்கள் என்ற எண்ணம் இருக்கவேண்டும் என்றார். (6)




## இலங்கைக்கு கடத்த முயன்ற 3ஆயிரம் லீற்றர் டீசல் பறிமுதல்

(நாகர்கோவில்)

இலங்கைக்கு கடத்த முயன்ற 3 ஆயிரம் லீற்றர் டீசல் பறிமுதல் செய்யப்பட்டது.

கன்னியாகுமரி அருகே உள்ள சின்ன முட்டம் துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு டீசல் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவதாக, புகார் எழுந்ததைத் தொடர்ந்து, கியூ பிரிவு பொலிஸார் அங்கு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

சம்பவத்தன்று நள்ளிரவில் ஒருபடகில் டீசல் கான்கள் அடுக்கப்பட்டு புறப்பட தயாரான போது, பொலிஸார் அதைச்சுற்றி வளைத்தனர். படகில் இருந்தவர்கள் கடலில் குதித்து தப்பிவிட்டனர். படகில் இருந்த 3ஆயிரம் லீற்றர் டீசலும் படகும் பறிமுதல் செய்யப்பட்டது. இவை கடலோரப் பாதுகாப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

படகின் உரிமையாளரான கன்னியாகுமரியைச் சேர்ந்த மார்சிலின் மைக்கேலிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. (6)

# மத்திய மந்திரிகள் எம்.பி.க்களை சந்திக்க நேரம் ஒதுக்கவேண்டும்



## மன்மோகன் சிங் உத்தரவு

எம்.பிக்களை சந்திக்க நேரம் ஒதுக்கவேண்டும் என்று அனைத்து மந்திரிகளுக்கும், பிரதமர் கடிதம் அனுப்பி உள்ளார்.

மத்திய மந்திரிகளை சந்திக்க எம்.பிக்கள் விரும்பினால் மத்திய மந்திரிகள் பலர் நேரம் ஒதுக்கி தருவதில்லை என்று எம்.பிக்கள் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து மன்மோகன்சிங் அனைத்து மத்திய மந்திரிகளுக்கும் கடிதம் அனுப்பியுள்ளார். அதில் கூறியிருப்பதாவது, எம்.பிக்கள் தங்கள் தொகுதி பிரச்சினைகள் மற்றும் முக்கிய கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட துறைக்குக் கொண்டு சென்று தீர்த்து வைப்பது அவர்களின் முக்கிய கடமையாகும்.

இதற்காக அவர்கள் மத்திய மற்றும் மாநில மந்திரிகளை சந்தித்து முறையிடுவார்கள் . சிறந்த எம்.பிக்களின் பணியாக இது இருக்கும். எனவே எம்.பிக்கள், மத்திய மந்திரிகளை சந்தித்து முறையிட விரும்புவார்கள். அவர்களுக்கு நேரம் ஒதுக்கிக் கொடுத்து எளிதாக சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறியுள்ளார். (6)

# சேது சமுத்திர திட்ட மாற்றுப்பாதை ஆய்வு பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது

தனுஷ்கோடி கடலில் சேது சமுத்திர கால்வாய்த்திட்டத்தை செயல்படுத்துவதற்கு எதிர்ப்புக் கிளம்பியதைத் தொடர்ந்து உயர் நீதிமன்றம் இதற்கான மாற்றுப்பாதை குறித்து ஆய்வுக்குழு அமைக்கப்பட்டும் மாற்றுவழி குறித்த பணிகள் நடைபெறாமல் இருந்தது.

தற்போது சேது சமுத்திர திட்டம் செயல்படுத்தப்படவுள்ள மன்னார் வளைகுடா மற்றும் பாக்குநீரிணை கடல்பகுதியில், மாற்றுவழிக்கான கடல் பகுதியில் கடல் சார்ந்த சுற்றுச்சூழல் குறித்த ஆய்வுப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாம்பன் முதல் கோடியக்கரை வரையிலான கடல்பகுதியில், எட்டு மையங்களில் இதற்கான ஆய்வுக் கருவிகள் ஒளிரும் மிதவைகளின் உதவியுடன் கடலில் நிறுவப்பட்டுள்ளன.

இராமேஸ்வரம் கடல்பகுதியில் கிழக்கே 6கி.மீ. தூரத்தில் நடுக்கடலில் ஆய்வுக்கருவி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இக்கருவியை பாதுகாக்க அருகிலேயே மீனவரின் படகு ஒன்றும் நிறுத்தப்பட்டு இப்பகுதியில் மீன் பிடிக்க வரும் மீனவர்களுக்கு எச்சரிக்கை செய்யப்படுகிறது. மிதக்கும் கருவியின் அடிப்பகுதியில் கடலுக்குள் இணைக்கப்பட்டுள்ள கமரா மற்றும் கருவிகள் மூலம் பெறப்படும் விபரங்கள் , இராமேஸ்வரம் சேது சமுத்திர திட்ட கழக அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மொனிட்டரில் பதிவாகும். இது போல் எட்டு மையங்களில் இருந்தும் பெறப்படும் தகவல்களின் அடிப்படையில், கடல் சுற்றுச்சூழல் பாதிப்பு, சீதோஷ்ண நிலையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து ஆய்வு நடத்தப்படும். ஓர் ஆண்டு காலம் நடைபெறும் இந்த ஆய்வுப் பணியில், கொச்சியிலுள்ள தேசிய கடல் ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர். (6)



சேதுசமுத்திர கால்வாய் ம்ாற்றுப்பாதை குறித்த கடல் சுற்றுச்சூழல் ஆய்வு பணிக்காக இராமேஸ்வரம் கடல் பகுதியில்அமைக்கப்பட்டுள்ள மிதக்கும் ஆய்வுக் கருவி.

# அவுஸ். கிரிக்கெட் வீரர்களை மகாராஷ்டிராவில் விளையாட அனுமதிக்கமாட்டோம்

## பால்தாக்கரே தெரிவிப்பு

(மும்பை)

அவுஸ்திரேலியாவில் தொடர்ந்து இந்தியர்கள் தாக்கப்பட்டு வருவதற்கு பதிலடியாக, அடுத்த மாதம் ஆரம்பமாக உள்ள ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில், மகாராஷ்டிரா மாநிலத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில், அந் நாட்டு கிரிக்கெட் வீரர்களை விளையாட அனுமதிக்கமாட்டோம் என சிவசேனா கட்சி தலைவர் பால்தாக்கரே முன்னர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா கிரிக்கெட் வாரியத் தலைவரும், அமைச்சருமான சரத்பவார், கடந்த 7 ஆம் திகதி பால் தாக்கரேயை சந்தித்து, அவரது முடிவை மறு பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். இந்த சந்திப்பு தொடர்பாக பல சர்ச்சைகள் எழுந்தன.

இந்நிலையில், கடந்த திங்களன்று வீடியோ - கான்பரன்சிங் வழியாக சிவசேனா கட்சிக்கூட்டத்தில் பேசிய, அதன் தலைவர் பால் தாக்கரே கூறுகையில், அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள், மகாராஷ்டிராவில் நடைபெறும் போட்டிகளில் விளையாடக் கூடாது என்றார்.



ஐ.பி.எல். தொடரில் மொத்தம் நடைபெற உள்ள 60 போட்டிகளில் 13 போட்டிகள் மும்பையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் பங்கேற்க, பாகிஸ்தான் அல்லது அவுஸ்திரேலியாவை சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள் அழைத்து வரப்பட்டால், அவர்களின் பாதுகாப்பிற்கு உறுதியளிப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் சில நாட்களுக்கு முன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# சீரற்ற காலநிலையால் ஆட்டம் பாதிப்பு; தென்னாபிரிக்க அணி போராட்டம்

(கொல்கத்தா)

நான்காம் நாள் ஆட்டம் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்க தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களையிழந்து 115 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 2 டெஸ்ட், 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் கடந்தவாரம் நாக்பூரில் நடை பெற்ற முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந் நிலையில் தீர்க்கமான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 14ஆம் திகதி கொல்கத்தாவில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 296 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையிழந்து 643 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 347 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்ட நேரமுடிபில் விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்றைய ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக தாமதமாக மதியபோசனை இடைவேளைக்கு முன்னதாக ஆரம்பமாகியது.


எனினும் ஒரு ஓவர் வீசப்பட்ட நிலையில் மதிய போசன இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இடைவேளைக்குப்பின் ஆட்டம் ஆரம்பமானபோது தென்னாபிரிக்க அணி 36 ஓட்டங்களை எடுத்த போது முதலாவது விக்கெட்டையிழந்தது.

இதில் அணித்தலைவர் சிமித் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய பீற்றர்சன் 21, கலிஸ் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 111 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டையிழந்தது.

இந்நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது. தொடர்ந்து மழை காரணமாக ஆட்டம் தாமதமாக தேநீர் இடைவேளை அறிவிக்கப்பட்டது. தேநீர் இடைவேளைக்கு பின்பும் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் தடைப்பட்டது.

எனினும் ஆட்டம் ஆரம்பமாகி ஒரு ஓவர் வீசப்பட்ட நிலையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களையிழந்து 115 ஓட்டங்களை எடுத்தது.




இதில் ஹசிம் அம்லா 49 ஓட்டங்களையும் பிறின்ஸ் ஓட்டமெதனையும் எடுக்காமலும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

பந்துவீச்சில் அமித் மிர்சா 2 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப்போட்டியில் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க தென்னாபிரிக்க அணிக்கு 7 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 232 ஓட்டங்களை எடுக்க வேண்டும். ஐந்தாவதும் இறுதியுமான நாள் ஆட்டம் இன்றாகும்.

# பாதுகாப்பு நீக்கப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றில் நேற்று மனுத்தாக்கல்

(கொழும்பு)

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் எதிர்க்கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் பொலிஸ் பாதுகாப்பு நீக்கப்பட்டதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கு தொடர்ந்தும் அச்சுறுத்தல் உள்ளதால் அவர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு நீக்கப்பட்டமை அநீதியானது என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச தரப்பின் அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர், பிரமுகர் பாதுகாப்பு பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர், அமைச்சர்கள், பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளர், பாதுகாப்பு செயலாளர், தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவை இம் மாதம் 22ஆம் அல்லது 23ஆம் திகதியில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமாறு மனுதாரர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பாது காப்புக்காக 4 பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்படுவதாகவும் இதற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னரும் அந்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாத ஆளும் தரப்புடன் தொடர்புடைய ஐவருக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ச மற்றும் லலித் திஸநாயக்க ஆகிய ஆளும் கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 8 பேருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை எனவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னரும் மனுதாரர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் நீங்கவில்லை எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆறாவது மனுதாரான அகிலவிராஜ் காரியவசம் மீதும் கடந்த 27ஆம் திகதி துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டதாகவும் அது தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைத்தவிர விஜயதாச ராஜபக்ஷ, பாலித ரங்கே பண்டார, சாவில ரத்நாயக்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினகள் அச்சுறுத்தலை எதிர்கொள்ள நேரிட்டதாகவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு மாத்திரம் நீக்கப்பட்டமை அவர்களின் அடிப்படை உரிமையை மீறும் செயலென அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5,14)

## நாடாளுமன்ற...

போட்டியிடவுள்ளார்.

கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, முன்னாள் பிரதியமைச்சரான கணேசமூர்த்தி, அமீர் அலி, அலிஸாஹிர் மௌலானா ஆகியோர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ளனர்.

அதேவேளை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

## ஜெனரல் சரத்...

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரிகள் பத்துப் பேரும் நான்கு சிவிலியன்களும் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகள் முடிபடைந்து வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளதால் அவர்களை நீதிமன்றம் விடுதலை செய்ததாகவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட நபர்களிற்கு நீதிமன்றம் அழைப்பாணை பிறப்பித்தால் மீண்டும் நீதி மன்றத்தில் ஆஜராக வேண்டுமென நீதவான் அறிவித்ததாகவும் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்தஜயக்கொடி தெரிவித்துள்ளார். (ச-14)

## ஜெனரல் சரத் பொன்சேகா...

விடுதலைக்கு உத்தரவிடுவதாகவும் நீதவான் சம்பா ஜானகி அறிவித்துள்ளார்.

இதனையடுத்து கொழும்பு - 7 இராஜகிரிய மாவத்தையில் அமைந்துள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவின் அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்ட அவர்களை அனோமா பொன்சேகா, மக்கள் விடுதலை முன்னணியின் தலை வர் சோமவன்ச அமரசிங்க ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தாம் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் தவறாக நடத்தப்படவில்லை என விடுதலை செய்யப்பட்டோர் தெரிவித்தனர்.

தனது கணவர் உட்பட தடுத்து வைக்கப் பட்டிருக்கும் அனைவரும் விரைவில் விடுதலைசெய்யப்பட வேண்டும் என்பதைத் தொடர்ச்சியாக வலியுறுத்திவருவதாகக்குறிப்பிட்ட ஜெனரல் சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகாசந்தர்ப்பவாத அரசியலுக்கு எதிராக அனை வரும் அணிதிரள வேண்டும் எனத் தெரிவித்தார். (ச-5)

## மனித உரிமை மீறல் சம்பவ...

தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கை அடைய முடியாத இலக்கை நோக்கி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால் தற்போது வழங்கப்பட்டுள்ள இந்த ஆறு மாதங்களுக்குள் இலங்கை அரசு நீதித்துறை, காவல்துறை, பொதுநிர்வாகத் துறை, தேர்தல் ஆணையகம் ஆகியன சுயாதீன அமைப்புக்களாக செயற்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் நாட்டில் மனித உரிமை செயற்பாடுகளில் குறைந்த பட்ச நடவடிக்கைகளையாவது மேற்கொள்ள வேண்டும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஜி.எஸ்.பி.பிளஸ் வர்த்தக வரிச்சலுகை ஐரோப்பிய ஒன்றியத்தினால் 16 வறிய நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதனை பெறுவதற்கான நிபந்தனைகள் கடுமையானவை.. அதாவது, அவர்கள் சமூக மற்றும் மனித உரிமைகளை அனைத்துலக தரத்தில் பேணவேண்டும்.

சரணடைந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை படுகொலை செய்தது, உதவி நிறுவனப் பணிப்பாளர்களை படுகொலை செய்தது, பல ஆயிரம் பொதுமக்களை படுகொலை செய்தது போன்ற பல மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் படையினர் மீது உள்ளது.

விடுதலைப்புலிகள் மீதும் இதனை ஒத்த குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள போதும் அவர்களை கடந்த மே மாதம் முற்றாக அழித்துவிட்டதாக அரசு தெரிவித்துள்ளது.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆடை ஏற்றுமதி களில் இருந்து அரசு வருடம் தோறும் 150 மில்லியன் டொலர்களை பெற்றுவருகின்றது.

இலங்கையில் நடைபெற்ற மோதல்களின் இறுதி மாதங்களில் 7 ஆயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 37 வருடங்களாக நடைபெற்ற உள்நாட்டு போரில் 80 ஆயிரம் தொடக்கம் ஒரு இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5,9,14)

## பொன்சேகாவை விடுதலை...

விக்கிரமசிங்க மற்றும் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச உட்பட பல கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

10 இலட்சம் பேரிடம் கையெழுத்தைப் பெறும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வைபவம் கட்சித் தலைவர்களின் கையெழுத்துடன் ஆரம்பமானது.

இந்த கையெழுத்து வேட்டையத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜெனரல் சரத் பொன் சேகாவின் குடும்பத்தாரை இந்த அரசாங்கம் தேடிச் சென்று பொய்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி கைது செய்வதாக குறிப்பிட்டார்.

இப்படியே சென்றால் ஜெனரல் சரத் பொன்சேகாவின் இறந்த உறவினர்களையும் இந்த அரசாங்கம் கைது செய்யும் இந்த அரசு இறந்தவர்களைக் கைது செய்ய அவர்களின் புதைகுழியையும் போய்த்தோண்டும். அத்துடன் இந்த நாட்டை மீட்டுக்கொடுத்த தமது தளபதியை விடுதலைசெய்யும் இந்த போராட்டத்தில்சகல மக்களும் பங்குகொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த மக்கள் விடுதலைமுன்னணியின்தலைவர்சோம வன்ச அமரசிங்க, தங்களின் இலக்கு 10 இலட்சம்கையெழுத்துக்கள் அல்லஎனவும் ஜெனரலுக்கு வாகளித்த அனைவரினதும் மற்றும் ஜனாதிபதிக்குஎதிரானவர்களின் கையெழுத்துக்களையும் பெற்று மொத் தமாக ஒரு கோடிகையெழுத் துக்களைப் பெறுவோம் எனவும் கூறுரைத்தார். (ச-5,9)

# பொதுத்தேர்தலில் தனித்தா?...

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தனித்து போட்டியிடுவது என தீர்மானித்துள்ள தாக அதன் ஊடகப் பேச்சாளர் அஸாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து இதுவரை தமது கட்சி தீர்மானிக்கவில்லையெனவும் மௌலான கூறியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் தனித்துப் போட்டியிட வேண்டும் எனக் கட்சியினர் சிலர் யோசனை முன்வைத்துள்ளதுடன் வேறு சிலர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிட வேண்டும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பொதுத் தேர்தலில் தமது கட்சியின் சார்பில் பேராசிரியர்கள் போன்ற புத்திஜீவிகளை வேட்பாளர் பட்டியலில் இணைக்க எண்ணியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2008ஆம் ஆண்டு அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி முதன்முறையாக பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், ஈழமக்கள் ஜனநாயக கட்சியும் தனித்தனியே போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இரண்டு கட்சிகளும் தனித்து போட்டிட்ட போதிலும் கூட்டுக் கட்சிகளாக செயற்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஸ்ராலின், தமது கட்சி நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் தனித்து போட்டியிடுவதா என்பது குறித்து இதுவரை எந்த விதமான முடிபினையும் எடுக்கவில்லை. எனினும் தாம் தொடர்ந்தும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாக கூறினார்.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தனித்து போட்டிடவுள்ளதாக கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். த.தே.கூட்டமைப்புடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை வெற்றியளிக்காத நிலையிலேயே தாம் தனித்து போட்டியிடுவதற்கான முடிபினை மேற்கொண்டுள்ளோம்.

தமிழ் மக்கள் இன்று ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகளை நிராகரித்துள்ளனர். இன்று எம்முன் உள்ள சவால் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். அதற்கான வழிமுறைகளை கையாள வேண்டும் என்றும் கூறினார்.

ஸ்ரீ ரெலோ அமைப்பு பொதுத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து தீர்மானம் ஒன்றை மேற்கொண்டுள்ளது என அதன் தலைவர் பரராஜசிங்கம் உதயராசா தெரிவித்துள்ளார்.

எனினும் தனித்த போட்டியிடுவதா, அரசுடன் இணைந்து போட்டியிடுவதா என்பது குறித்து தீர்மானம் எதுவும் மேற்கொள்ளவில்லை. தொடர்ந்தும் இது குறித்து நாம் ஆராய்ந்து வருகின்றோம் என்றார். (ச-5,9,14)

## யானைச் சின்னத்தில் போட்டியா? தீர்மானிக்கவில்லை-மனோ

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிடுவது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் யானைச் சின்னத்தில் போட்டியிட சம்மதம் தெரிவித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் குறிப்பிட்டதாகச் செய்திகள் வெளியாகின.

இது குறித்து மனோ கணேசனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கட்சியின் செயற்குழுக் கூட்டத்தின் பின்னரே தமது முடிபினை அறிவிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

# மரண அறிவித்தல்

## சிவபாக்கியம் செல்லத்துரை



அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் செல்லத்துரை அவர்கள் 15.02.2010 திங்கள் அன்று இறைவன் அடி சேர்ந்தார். இவர் காலம் சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலம் சென்ற கனகசபை லெட்சுமியின் அன்பு மகளும், தனலட்சுமி (யாழ்), விஜயலட்சுமி (யாழ்), கோபாலகிருஷ்ணன் (சிங்கப்பூர் யுவலர்ஸ், வெள்ளவத்தை கொழும்பு), வசந்தமல்லிகா (பிரான்ஸ்), தயநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு தாயாரும் காலம் சென்ற வினாயகரெட்ணம் (மண்டைதீவு), இராஜரெட்ணம் (மண்கும்பான்), மாலினி (வண்ணார்பண்ணை), சிவநாதன் (பிரான்ஸ்), சந்திரகுமார் (குமார்ஸ் சொப்-பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜயரூபன் (ரூபன் புத்தகசாலை-யாழ்), காந்தரூபன் (பிரான்ஸ்), நாகலோஜினி, லிங்கரூபன், கிருஷ்ணராதா, துவாரகன், கோபிதா, ராதாகிருஷ்ணன், ராகவந்தி, கிருஷாந்தன், சிவப்பிரகாஷ், வித்தியாபதி, கேதீஸ்வரன், சுமதி ஆகியோரின் பேர்த்தியாரும் கோகுல்நாத்தின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 7 Aveune de la Réunion-93600 Aulnay Sous Bois வில் உள்ள அவரது இல்லத்தில் 22ஆம் திகதி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் அவரது பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புக்கு எடுத்து வரப்பட்டு 25.02.2010 வியாழக்கிழமை பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தொடர்புகளுக்கு பிரான்ஸ் - 0033148665493

கொழும்பு- 0112361920

யாழ்ப்பாணம்- 0779187129

198/5, பொன்னப்பா லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(452)


# திருமறைக் கலாமன்றம் நாடகப் பயிலகம்

## விண்ணப்பம் கோரல்

எமது மன்றத்தின் நாடகப் பயிலகத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற நாடகப்பயிற்சி நெறியின் 2010ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும், அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெற விரும்புபவர்களுக்கும், நாடகமும், அரங்கியலும் கற்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக இப் பயிற்சிநெறி அமையும்.

பயில விரும்புவோர் யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 27.02.2010 சனிக்கிழமைக்கு முன்னதாக ஒப்படைக்கவும்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2393

பிரதி இயக்குநர்
திருமறைக் கலாமன்றம்.

(C-4462)


# மரண அறிவித்தல்

## ஆழ்வான் முருகேசு



மீசி ஒல்லை புற்றளை புலோலியை சேர்ந்த ஆழ்வான் முருகேசு இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் சிவபாலசுப்பிரமணியம், யோகேஸ்வரி, யோகராணியின் தகப்பனும், இராசா (ஜேர்மனி), கலாமோகன் (வலம்புரி), சறோஜினி தேவியின் அன்பு மாமனாரும்,

றாஜநிதி, றஜனி (ஜேர்மனி), பிரகான் (வாழ்வகம்), பிரகாஷினி, பிரதாப், பிரசாந் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18.02.2010 இன்று வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசி ஒல்லை,
புலோலி தெற்கு,
புற்றளை.

தகவல்:-
மருமகன் கலாமோகன்

(C-4464)






இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02. 2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.